தென்மொழி

பொதுமை வரட்டும்!

ஓங்கட்டும் கைகள்;
ஒலிக்கட்டும் வன் முழக்கம்;
நீங்கட்டும் அடிமைநிலை,
இந்நிலத்திலே! — இனி
நிலைக்கட்டும் பொதுவுணர்வு
நம் உளத்திலே!

நடக்கட்டும் கால்கள்;
நடுங்கட்டும் ஆட்சியினர்;
வடக்கெட்டும் முழக்கங்கள்!
வலிமை வரட்டும்! — இனி
வரையட்டும் புதுக்கொள்கை;
வாழ்க்கை தரட்டும்!

கேட்கட்டும் உரிமைஒலி;
கிளரட்டும் வல்லுணர்வு;
ஏற்கட்டும் சூளுரைகள்;
இளைஞர் எழட்டும்! — இனி
எழுதட்டும் பொதுவுரிமை;
எழுச்சி பெறட்டும்!

திரளட்டும் மக்கள்குலம்;
தெளியட்டும் கொள்கைநலம்;
மிரளட்டும் ஆளவந்தார்;
மீட்சி தாட்டும்! — இனி,
மேலுமில்லை; கீழுமில்லை;
பொதுமை வரட்டும்!

சுவடி : 15.
ஓலை : 12.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை.
உருபா. 1

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:656: அன்புடையீர், தங்கள் இதழைக் கடந்த பலவாண்டுகளாகவே சுவைப்பவன் என்ற முறையில் இம்மடலை விடுக்கின்றேன்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறு அளவிலேனும் இவ்விதழைக் கிழமையிதழாகவோ, பத்து நாட்களுக்கோர் இதழாகவோ மாற்றியமைப்பின் நம் கொள்கைகள் விரைந்து பரவும்.

தாங்கள் கலந்துகொள்ளவிருக்கிற நிகழ்ச்சிகளை முன் கூட்டியே தனியாக, தங்கள் இதழிலாகிலும் வெளியிடுதல் வேண்டும். தாங்கள் எண்ணி ஆற்றுவீராக!

அண்மையில் தொடங்கிய இதழ்கள் இலக்கக் கணக்கில் விற்பனையை எட்டியுள்ளதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மற்றும் இதழில் விளம்பரங்கள் செய்யவும், திரட்டவும் முயலுதல் வேண்டும். அன்பன், —**ப. முத்துச்சாமி.** அறி.இ. திண்டுக்கல்.

0:657: பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, ஐயா, உங்களால் வெளியிடப்படும்—"தென்மொழி" என்ற தாளிகைகளில் ஒன்று, இரண்டு நீங்கள் வருகை தந்து திரும்பிய நாடான இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் இல்லத்தில் தற்செயலாகக் காணக்கிடைத்துப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். மேற்படி, தாளிகையை இந்நாட்டைச் சேர்ந்த (இலங்கையின் தமிழ் ஈழத்தில்) எங்களைப் போன்றோர், தொடர்ந்து படிப்பது என்றால், மிகவும் தொல்லை.

நீங்கள் தமிழ் ஈழத்திற்கு வருகை தந்தபோது உங்களுக்கு ஏற்பட்ட பட்டறிவுகளையெல்லாம், **"தென்மொழியில்" "இலங்கைச் செலவு"** என்ற தலைப்பின்கீழ் அழகாக எடுத்தியம்பி இருப்பது இலங்கை வாசகர்களை மேலும் வாசிக்கத் தூண்டி இருக்கும் என்பதில் எந்த வகையான ஐயமும் இல்லை. தங்கள் (மார்ச்-ஏப்ரல் 1979) இதழில் உங்கள் நாட்டிற்கு வருகை தந்த எங்கள் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும், த.வி.கூ. யின் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் துணைவர்களின் புகைப் படத்தையும் முன்பக்க அட்டையில் அச்சிட்டு இருந்தது மேலும் தாளிகைக்கு மெருகூட்டுவதாக அமைந்து இருந்தது. நீங்கள், இங்கு வந்தது பற்றியும் சிங்கள ஆட்சியின்கீழ் தமிழர்கள்படும் இன்னல்களைப் பற்றியும் தங்கள் தாளிகையில் முதலிடம் கொடுத்து வெளியிட்டுத் "தமிழகம் வாழ்" தமிழ் உடன்பிறப்புகளுக்கு ஈழம் வாழ் தமிழ் உடன்பிறப்புகளாகிய எங்களின் இன்னோரன்ன சிக்கல்களைத் தெள்ளத் தெளிவாகத் தங்கு தடையின்றி அறிய வாய்ப்புக் கொடுத்து வரும் உங்கள் இதழ்க்கும் உங்களுக்கும் ஈழம் வாழ் தமிழ் உடன்பிறப்புகள் சார்பிலும், த.வி.கூ.யின் தொடக்க நாயகரான காலம் சென்ற தந்தை செல்வ

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

இனக்கொலைக் கொடியனை ஏனிங்குப் பெற்றனை?

செந்தமிழ்த் தாயே! செந்தமிழ்த் தாயே!
சேய்எனக் குரைசெய், செந்தமிழ்த் தாயே!
எந்தமிழ் மண்ணில் இருப்பவர் பலருள்
ஏற்றமில் லாமல் இருப்பவன் தமிழன!
சொந்தநன் மொழிநலச் சுரணையும் இல்லான்;
சொந்த,தன் இனத்தையே சுரண்டலும் செய்வான்!
இந்தவோர் இழிமன இனக்கொலைக் கொடியனை
ஏனிங்குப் பெற்றனை, இன்தமிழ்த் தாயே?

புட்களும் விலங்கும் போக்கை மறந்தில;
புன்மைத் தமிழனே புலத்தையே மறந்தான்!
துட்கவும் இல்லான்; துணுக்குறு கில்லான்;
தூசள வும்இனப் பாசமும் இல்லான்!
மட்கிய குப்பையன்; மல்லார்ந்த ஆமையன்!
மானமும் நாணமும் மாண்புடன் மறந்து
வெட்கங் கெட்ட விலைமகன் இவனை
வீணில் பெற்றதேன், வியன்தமிழ்த் தாயே?

கண்டவை எழுதிக் கயமையை வித்திக்
காசையும் மாசையும் கவினுறக் குவித்துப்
பெண்டையும் பிள்ளையும் பிணையலாய் வைத்துப்
பீற்றற் பதவியும் பட்டமும் பெற்றுத்
துண்டையும் துணுக்கையும் தொடர்பிலா துரைத்துத்
தொலையாச் சொற்பொழி வாளனாய்த் திரியும்—
முண்டையும் பெறாத—மூங்கையன் இவனை
முனைந்தேன் பெற்றனை, முத்தமிழ்த் தாயே!

முன்னையும் பின்னையும் மூடர்கள் தொடர,
மூளைச் சலவையர் முன்னடி விழுந்தெழப்
பொன்னையும் பொருளையும் பொங்கித் தின்றிடப்
பூச்சியாய்ப் புழுவாய்ப் புன்மைக் கொப்பியே
தன்னையும் தன்னுடைத் தந்தை தாயையும்
தாழ்ச்சிச் சந்தையில் தமுக்கடித் திழப்பவன்
என்னையிங் குயர்வினை எய்துவான் என்று,நீ
ஈன்று மகிழ்ந்தனை எந்தமிழ்த் தாயே!

பழமையும் பேணான்; புதுமையும் காணான்;
பரத்தைவாய் உரத்துடன் தரத்தையும் மிகுப்பான்!
வழமையீ தென்பான்; வாழ்விதென் றுரைப்பான்;
வானத்து மீனுக்கு வடிவெலாம் புனைவான்!
கிழமையும் புரவான்; கிளைமையும் தழுவான்;
கீழ்மை யென்பதே குணமெனக் கிளத்துவான்!
உழல்மெய் உறுப்பெலாம் அடிமையோன் இவனை
உலவஎன் விட்டனை ஒண்டமிழ்த் தாயே!

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி: 15 ஓலை 12.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

இரட்டை தி. பி. உயகம-
சூன்-சூலை-1979.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**

ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

வெட்கங் கெட்ட தமிழர்கள்!

என்னையும் சேர்த்துத்தான், மிகுந்த மனச் சலிப்புடன், என் உள்ளத்தின் ஆழத்தில் படிந்திருக்கும் இக்கருத்துகளை இங்கு எடுத்து எழுதத் தொடங்குகின்றேன். என்றால் இவற்றை எழுதாமல் இருக்க முடியவில்லை. எவ்வளவோ அமைவுற, எத்தனையோ நாள்கள் எண்ணிப் பார்த்து விட்டேன். இவற்றை எழுதும்போது எவர்எவர் முகமோ என் உள்ளத்திரையில் வந்து முகச்சுளிப்புக் காட்டுவதை என்றால் உணர முடிகிறது. இக் கருத்து-களைப் படித்த பின், இதுவரை எனக்குத் துணையாக இருக்கும் இரண்டொருவர் கூட, என்னை விட்டு விலகினாலும் விலகி விடலாம் என்ற எண்ணமும், எனக்கு இடையிடையே வந்தது. இருந்தாலும் இப்படியொரு கருத்துரையை எழுதத்துணிந்து விட்டேன். எவரேனும் ஒருவர் தமிழனுக்கு எதிரணியில் இருந்து கொண்டு, பின்னொரு நாளில், என் தாய்த்தமிழ் இனத்தைப்பற்றி எழுதுவதைவிட ஏன் நமக்கு நாமே எழுதி விடக்கூடாது—என்று எண்ணிப் பார்த்தேன்.

அதன்பின், எழுதுவது எனக்குச் சரியாகவே பட்டது. உடனே, எவ்வகை எதிர்ப்பு வந்தாலும் எழுதி விடுவது என்று துணிந்து விட்டேன். எத்தனை நாளைக்குத்தான் நம் உடற்புண்ணின் நாற்றத்தை நாமே மூடி வைத்துக் கொண்டிருப்பது? **'கருவியிட் டாற்றுவார்; புண் வைத்து மூடார் பொதிந்து'** என்ற பொன்மொழியை முன் வைத்து இதனை எழுதுகின்றேன். அன்பர்கள் இதனைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

என் இனத்திற்கு எப்படியும் விடிவு ஏற்பட வேண்டும் என்று நினைப்பவன் நான். எல்லா இனத்தைப் போலும், இந்தத் தமிழினமும், முன்னைய கால வரலாற்றில், தெரிந்தோ தெரியாமலோ இழந்து போன தன்மானம், தன்னுணர்வு, தன்னறிவு இவை ஏற்பட்டுத், தன் தாய்மொழிச் சிறப்பு, தன் பெருமைமிக்க ஆட்சி வாலாறு, இழந்துபோன பண்பாடு, அழிந்துபோன கலைகள், அரசியல் உரிமை, குமுகாயப் பொதுமை ஆகிய அத்தனை நிலைகளையும் மீட்டுக்கொண்டு முன்னேறிப் பெருமித நடையிட வேண்டும் என்னும் பேராசை எனக்கு! அதனால் சிலவற்றைத் துணிந்து, பச்சையாகவே, ஆனால் அடக்கத்தோடு, மிக்க பண்பாட்டோடு எழுத முன் வந்துள்ளேன். அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் கூட என்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேன். ஏனெனில் நான் காட்டப் போகும் கதை, வரலாற்று நிகழ்ச்சிகளில், ஒருவேளை, அவர்களோ, அவர்களுக்கு நெருங்கிய அன்பர்களோ, அல்லது அவர்கள் வழிபட்டு வரும் தலைவர்களோ, அல்லது அவர்களைப் போன்றவர்களோ கூட நடமாடலாம்; நடிப்பதைப் பார்க்கலாம். அதற்காக அவர்கள் மனம் வருந்தக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலையை இப்படி வெளிப்படையாகக் கொணர்ந்ததற்கு என்னைப் பொறுத்துக் கொள்ளவே வேண்டும். ஏனெனில், என் தன்மானத் தூவலினின்று வடியும் எழுத்துகள், வேறு எவரையும் தாக்குவதற்கு முன், எவர்க்கும் அறிவுறுத்து வதற்கு முன், என்னைத் தாக்கிவிட்டு-எனக்கும் அறிவுறுத்திவிட்டு-இன்னுஞ் சொன்னால் எனக்கும் எச்சரித்து விட்டுத்தான் அச்சேறி வெளியில் வரும். அப்படிப்பட்ட தன்மையது அது; எனக்கும் கட்டுப் படாதது! இனி, இக் கட்டியங்கார முன்னுரைப் புலம்பலை இத்துடன் நிறுத்திக் கொண்டு, செய்திக்கு வருகின்றேன்.

நம் தமிழர்கள் நடத்தும் கடந்த கால அரசியல் போராட்டங்களை மிகவும் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்றவன் நான். அவற்றில்தான் எத்தனைப் போலித்தனங்கள்! எத்தனைப் பொய் யுரைகள்! புளுகுரைகள்! அப்பப்பா! இப்படியே போனால் தமிழினந் தான் என்றைக்கு விடிவது? தமிழர்கள்தாம் என்றைக்கு முன்னேறுவது? அவர்கள் நடத்தைகளில்தாம் எத்தனை இழிவுகள்! எத்தனைத் தாழ்ச்சிகள்! இந்த வகையில் அறிந்தோ அறியாமலோ **'தேசியம்'** பேசித் திரிகின்ற வடநாட்டானுக்கு வால் பிடிக்கும் அடிமைத் தலைவர்களைப் பற்றி நான் துளியும் கவலைப்படவில்லை.

வடவர் வீசியெறிகின்ற உணவுத் துணுக்குகளையும், காசுத் தூசுகளையும், கந்தல் கழிசடைகளையும் பொறுக்கி உண்பதற்காகவும், உடுப்பதற்காகவுமே தேசியம் பேசுகின்ற அக்குட்டித் தலைவர்களையும், வீடணப் பிரகலாதன்களையும் கண்டு நான் மனஞ்சலிப் படையவில்லை. ஆனால், நம் இனத்தலைவர்கள் என்று கூறிக்கொண்டு, நம் மக்களையே சுரண்டித் தின்பதற்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைகின்றார்களே, அடடா, அவர்களை நினைக்கையில்தான் நெஞ்சு பற்றிக் கொண்டு வருகிறது; மூளை புண்ணுகிக் குமைகிறது!

இவர்களின் அரசியலே வண்ணச் சுவரொட்டிகளிலும், செய்தித் தாள்களின் முழுப்பக்க விளம்பரங்களிலுந்தாம் மிடுக்கு நடை போடுகின்றது. பல்லாயிரக்கணக்கான உருவாக்களைப் பாழடித்து விட்டுத் திரைப்படக் காரர்களின் பாணியில், இவர்கள் அச்சடித்து ஒட்டும் சுவரொட்டிகளால் யாருக்கு என்ன ஊதியம் என்பதைப் பற்றி இவர்கள் ஒரு கணமேனும் சிந்தித்திருப்பார்களா? பிறந்தநாள் சுவரொட்டிகள் முதல், வாழ்த்துச் சுவரொட்டிகள் வரை இவர்கள் சுவரகலத்தில் மூன்று நான்கு வண்ணங்களில் அடித்து ஒட்டும் சுவரொட்டிச் செலவு இவர்களுக்கு எங்கிருந்து வந்தது? அத்தனைப் பணமும் இவர்களைப் பின்பற்றும் ஏழை உறுப்பினர்களின் கைகளிலிருந்தன்றோ வந்திருக்க வேண்டும். இல்லையானால், இவர்களால் கள்ள வாணிகச் சந்தையில் பெரும்பொருள் ஈட்டிய அல்லது ஈட்டிக் கொண்டிருக்கும் செல்வத் திருடர்களின் கமுக்க அறைகளிலிருந்தன்றோ, வெளிப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சுவரொட்டிகளுக்கும் தமிழின மீட்பு—முயற்சிகளுக்கும் என்ன தொடர்பு இருக்கிறதாக இவர்கள் கருதுகின்றனர். இவர்களின் அரசியலே சுவரொட்டி அகல நீளத்திலன்றோ வளர்ந்து வருகின்றது! எவ்வளவு மானக்கேடான நிலை இது.

இவ்வகையில், ஆளுங்கட்சியாக அரசுக்கட்டிலில் ஏறியவர்களைப்பற்றி எழுதவே கை கூசுகிறது. அடடடா! இவர்களின் ஆர்ப்பாட்டச் சுவரொட்டிகளுக்கு அளவே இல்லை. கொஞ்சமும் அருவருப்படையாமல் இவர்கள் தங்கள் பெயர்களையும், செயல்களையும் சுவரொட்டிகள் வழியாக விளம்பரப் படுத்திக் கொள்ளும் இழிதகைமைதான் என்ன! அரசு நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்தும் வகையில், இவாகள் தங்களைப்பற்றி அடித்துப் பரப்பிக் கொள்ளும் சுவரொட்டிச் செலவு பொதுமக்களுடைய வரிப்பணத்தைத் சேர்ந்தது தானே! ஊரார் பணத்தில் பட்டப்பகலில் சொரிவாணம் விடும் இவ்வகை ஊதாரிச் செலவினங்களால் அரசுக்கு எத்தனை வகையில் இழப்பு! அண்மையில் செய்தித்தாளில் ஒரு பக்க அளவில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. அதில் நம்(!) முதலமைச்சர் அவர்கள் ஒருபுறம் கைகூப்பி வணங்கிய வகையில், (அடடா! என்ன திரைப்பட நடிப்பு!) கடந்த இரண்டாண்டுகளில் அரசு நிறைவேற்றிய திட்டங்களையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டியிருந்தார்கள். அதன்பின்

இன்னொரு விளம்பரம் வந்திருந்தது. பெரியார், அண்ணா, இராசாசி, காமராசர் ஆகிய மறைந்துபோன அத்தனைத் தலைவர்களின் படங்களையும் போட்டு, அரசு அவர்கள் வழியில் மக்களுக் குழைப்பதாக ஓர் ஏமாற்று விளம்பரம்! எத்தனை மூடர்கள் இவர்கள்! அந்த விளம்பரத்தில் உள்ள தலைவர்களெல்லாரும் உயிரோடு இருந்தபொழுது அவர்களை நேருக்கு நேராகவும், மறைமுகமாகவும் எதிர்த்துக் கொண்டும் ஏசிக் கொண்டும் திரிந்த இவர்கள், அவர்கள் உயிரோடு இருந்த பொழுது அவர்கள் கூறிய கருத்துரைகளையெல்லாம் காதிலும் போட்டுக் கொள்ளாமல் செருக்கித் திரிந்த இவர்கள், அவர்கள் மறைந்தபின் அவர்களின் பிணங்களையன்று, படங்களை வைத்துக் கொண்டு எத்தனை வகையில் ஆலோலம் பாடுகிறார்கள். இவர்களால் ஏமாற்றப்படும் மக்கள் நம்மவர்கள் தாமே! எத்துணை இரங்கத்தக்கது! விளக்குமாற்றுக்கு இவ்வளவு பெரிய பட்டுக்குஞ்சமா? விளம்பரம் வாணிகத்துக்கு வேண்டியதுதான். அரசியலுக்கு அது வேண்டியதில்லை; இக்காலத்தில் ஓரளவு அஃது அரசியலுக்கும் வேண்டியதாக இருந்தாலும், அதற்காக இப்படியா? அதுவும் அரசுப் பணத்தில்! இன்னும் வானொலி, திரைப்படம், தொலைக் காட்சிகளில் வேறு அரசியல் விளம்பரங்கள் ஏராளமான பணச்செலவுக்கு வழி வைக்கின்றன.

இனி, இவர்கள் அணிப்படையில் சேர்ந்த ஒரு கற்றுக்குட்டி அமைச்சர், தாம் கனவிலும் எண்ணாத ஒரு நிலையில், தம்மை ஓர் அமைச்சராகக் கொண்டு வந்து நிறுத்திய தம் முதலமைச்சர் பெருமானுக்கு, ஒரு விழாவில் நன்றி சொல்கிறார், இப்படி: 'இவர் (இம் முதலமைச்சர்) நடித்த **'உலகம் சுற்றும் வாலிபன்'** படத்தைப் பதினேழு முறைகள் பார்த்தேன்; அதனால் தான் அமைச்சராகிவிட்டேன்' என்று. எப்படி இருக்கிறது, தமிழகத்தின் அமைச்சராக வருவதற்குரிய தகுதி இலக்கணம்! அதே விழாவில், அதே பொதுமக்கள் முன்னிலையில் இன்னும் ஒரு படி மேலே சென்று கலைமகள் போன்ற ஒரு பெண் அமைச்சர் சொல்கிறார்: 'இவர் (முதலமைச்சர்) நடித்த **'ரிக்சாக்காரன்'** படத்தைப் பார்த்துத்தான் நான் அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தேன்; அதன்பின் எனக்குக் கொள்கைகள் விளங்கின; பாடுபட்டேன்; அமைச்சராகி விட்டேன்' என்று. அட! இழவே! தமிழகத்தின் அரசியல்தாம் எத்துணையளவில் இழிந்து போய் விட்டது!

இன்னொரு வேடிக்கை பாருங்கள்! முதலமைச்சராகிவிட்ட ஒருவர் வெய்யில் நேரத்தில், தாம் வணங்குவதாகக் கூறிக்கொள்ளும் முன்னாள் முதல்வர் ஒருவரின் அடக்க மேடைக்கு மாலை போட்டு வணங்குவதாகப் போகிறார். அக்கால் அருகிலிருந்த அவர் தொண்டரடிப் பொடியாகிய (அவர் பெயரெடுத்த) அமைச்சர் பெருமகன் ஒருவர், 'ஐயோ, அண்ணனின் பொன்னடிகள் சுடுமே' என்று, தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கெல்லாம் கேட்குமாறு, வாய்விட்டுப்

புலம்பி, தாம் மேலே அணிந்திருந்த சலவைத் துண்டை (மேலாடையை!) எடுத்து, அவர் நடந்து போகும் பாதையில் விரிக்கிறார்! என்னே இவரது 'பரதப்' பத்திமை! அல்லது 'குகத்'தன்மை! இனி, இதைவிட இரங்கத்தக்கது, இந்த நிகழ்ச்சியைத் தம் மாணவ கோடி ஒருவர் வாய்வழிக்கேட்ட, முன்னாள் முதல்வரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஆகிய ஒருவர், முகஞ்சுளித்து, 'அட! தமிழனே!' என்று தலையிலடித்துக் கொள்வதற்கு மாறாக, தம்மைச் சுற்றியுள்ள தம் தொண்டர் அடிப்பொடிகள், சற்றும் எதிர்பாராத அளவிற்கு, மனம் நொந்து, ஏக்கத்துடன், 'உம்; நம் கட்சியில் நமக்கு இப்படி ஓர் ஆளில்லையே' என்று சலித்துக் கொண்டது!

அண்மையில் நடந்த ஓரிரண்டு இடைத் தேர்தல்களில் இந்த அரசியல் கட்சிகள் செலவழித்த பணத்தையும், மக்களை ஏமாற்ற அவை மாறி மாறிக் கொடுத்த உறுதி மொழிகளையும் அளவிடவே முடியாது. அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசுக் கட்டிலில் வீற்றிருக்கும் கட்சி தேடிக்கொண்ட விளம்பரங்கள் குடியரசு அமைப்புக்கே புறம்பானது. இந்தவிடத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிட்டே ஆகல் வேண்டும். நான் சிங்கப்பூர் சென்றிருந்த பொழுது அந்நாட்டின் முதலமைச்சர் **இலீகுவானயூ** அவர்கள் படத்தையோ, அவர் பற்றிய விளம்பரத்தையோ அந்நாட்டில் எங்கும் பார்க்க முடியவில்லை. இலைமறை காயாக விருந்து அவர் செய்து வருகின்ற பொது நன்மைக்கான செயல்களில் ஆயிரத்தில் ஒரு பங்கு தானும் செய்ய முடியாத இவர்கள் விளம்பரத்திற்காக அரசுப் பணத்தை இவ்வளவில் கொட்டியழுவதா?

இனி, பெரியார் அவர்கள் இந்நாட்டு விடுதலைக்கெனக் கூறித் தொகுத்து வைத்த கோடிக்கணக்கான உருபாக்களை, அவர் விட்டுச் சென்ற கட்சியின் பெயரால், தங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக, எத்தனை வகையில் செலவிட்டுத் தீர்க்கிறார்கள்! பெரியார் பணம் அவர் பெயரால் மருத்துவமனைகளுக்கும், கல்விக் கூடங்களுக்கும் செலவிடப் பெறுகின்றன. இவற்றுக்காகச் செலவிட அரசும், பிற பொதுநிலைச் செல்வர்களும் இருக்க, இன விடுதலைக்கும் நாட்டு விடுதலைக்கும் பொதுமக்களிடமிருந்து சேர்க்கப் பெற்ற அத் தொகையை இவற்றுக்காக எப்படிச் செலவிடலாம்? இதைக்கேட்க அந்தக் கட்சியில் ஒரு தொண்டரும் முன்வர வில்லையே! இன்னும் புராணங்கள், இதிகாசங்கள் என்னும் பெயரால், இவர்கள் போடும் பட்டி மன்றங்களில் கூறப்பெறும் கருத்துகள் எத்துணை அருவருப்பாகவும், இழிவாகவும் இருக்கின்றன. இவற்றால் இக் கட்சியினர் தொகுக்கும் ஆயிரக்கணக்கான உருபாக்கள், என்னென்ன உருப்படியற்ற வழிகளில் செலவிடப் பெறுகின்றன என்பதை நினைக்கையில் தமிழனின் இரண்டகத்தன்மை நன்கு விளங்குகிறது. பார்ப்பனியச் சீரழிவை ஒழிக்கப் புறப்பட்ட இவர்கள், அதனினும் கேடான வழிகளிலன்றோ மக்களை இட்டுச் செல்கின்றனர்! கடவுள் இல்லை

என்பது மட்டுந்தானு பகுத்தறிவு? மாந்தனுக்குத் தேவையான பிற பகுத்தறிவு உணர்வுகளுக்காக இவர்கள் என்ன செய்கிறுர்கள்? இனி, இவர்களிலுந்தாம் எத்தனைப் போலி உணர்வுகள்! கடவுள் இல்லை என்று, வீடுகளில் மறைமுகமாகத் திருவிழாப் பூசனைகள் செய்பவர்கள் இவர்களில் எத்தனையோ பேர் இருக்கிறுர்கள். நாடக மேடைகளிலும் திரைப் படங்களிலும் பகுத்தறிவு பேசிக் கடவுளைப் பழித்த, பெரியார் தொண்டராகிய ஒரு நடிகர், தம் வீட்டுப் படுக்கையறையில் புட்ட பர்த்தி சாயிபாபா படத்தை வைத்து வணங்குவதும். தமிழக அரசியல் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் தம் படுக்கையறையில் அன்பொழுக, திருப்பதி வெங்கடாசலபதி படத்திற்கு நாள்தோறும் பூசை செய்வதும், பொதுமக்களுக்கு இவர்கள் செய்யும் இரண்டகம் ஆகாதா? ஏமாற்று ஆகாதா? எத்தகைய கொடிய இரட்டைப் புனைவுகள்!

பார்ப்பனனின் வேத, புராண, இதிகாசக் கீழ்மைகளை விட இன்னும் கேடு கெட்ட கீழ்த்தரமான, விலங்குத்தனமான இழிவு களையும், அருவருப்புகளையும் இன்று வெளிவரும் திரைப்படங்களும், கழிசடைக் காம இதழ்களும் பரப்பவில்லையா? இவற்றை வெளிக் கொணர்பவர்கள் பெரும்பாலும் தமிழர்கள் தாமே! ஒருபுறத்தில் இன முன்னேற்றம், மொழி முன்னேற்றம், நாட்டு முன்னேற்றம் என்று பேசிக்கொண்டு, மறுபுறத்தில் கீழ்மைகளையும், இழிவுகளையும் நம் மக்களிடையிலேயே விற்றுக் காசாக்குவதா? இஃது எத்துணை கயமை? தங்களைப் பின்பற்றும் பொதுமக்கள் இவற்றை விளங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காக அவர்கள்பணத்தை மறை முகமாகக் கொள்ளையடிப்பதுடன், அவர்கள் அறிவையும், மனங் களையும், வாழ்வியல் நோக்கங்களையும் கீழ்மைப் படுத்துவதா? எவ்வளவு மானக்கேடான கொடுமைகள்! தாழ்வை அகற்றக் கயமையை விளைவிப்பதா? எத்துணை வெட்கங்கெட்ட விளைச்சல்!

நம் தமிழக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் அமைச்சர் களில் முதல்வரும் மற்று ஓர் இருவரும் நடிகர்கள் என்பதால், திரைப் படக் கொள்ளைகளுக்கு இத்துணை ஆதரவா? எங்குப் பார்த்தாலும் திரைப்பட ஆட்சி! திரைப்படமே கொடி கட்டிப் பறக்கிறது. கல்விக் கூடங்கள், கலையரங்குகள், பண்பாட்டு மேடைகள், அரசு அலுவலகங்கள், விழாக்கள், வேடிக்கைகள் முதலிய அனைத்திலும் திரைப்படத் தாக்கங்கள்! நாடு எப்படி உருப்படும்? முன்னேறும்? சிறிது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இக்கால் உள்ள அரசியல் தலைவர்களிடத்தில் ஒழுக்கம் உண்டா? நேர்மை உண்டா? வாய்மை உண்டா? பொதுமக்கள் முன் இவர்கள் பேசுவது, செய்வது, கண்ணீர் வடிப்பது, இரங்குவது, அத்தனையும் நடிப்பு! வெறும் பசப்பான ஆனுல் பகட்டான நடிப்பு! இவர்களின் வெற்று ஆரவார ஆட்சியில் பொதுமக்களுக்கு எப்படி நன்மை கிடைக்கும்? அமைச்சர்கள் தங்கள் ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபடும்

நேரத்தைவிட, விழாக்கள், வேடிக்கைகள், மாநாடுகள், கூட்டங்கள், கொண்டாட்டங்கள், கட்சி நடவடிக்கைகள், ஊர்வலங்கள், பட்டி மன்றங்கள், பாட்டரங்குகள், நாடகங்கள் முதலியவற்றில் ஈடுபடும் பொழுதுகள்தாமே மிகுதி! அதிகாரிகளிடம் இவர்கள் ஆளுமையின் வினைச்சுமைகளை விட்டு விட்டு, இப் பொழுதுபோக்குகளிலேயே தங்கள் முழு நேரங்களையும் வீணடித்துக் கொண்டிருந்தால், இந்த நாடு எப்படி முன்னேறும்? மக்களுக்கு எப்படி நலன்கள் கிடைக்கும்? எனவேதான் மக்களும், மாணவர் போராட்டம், உழவர் போராட்டம், தொழிலாளர் போராட்டம், உழைப்பாளிகள் போராட்டம், காவலர் போராட்டம் முதலிய எண்ணிறந்த போராட்டங்களில் ஈடுபட்டுத் தங்கள் உரிமைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த வேண்டி யுள்ளது.

கையூட்டுகள், தவறான சலுகைகள், சட்டப் புறம்பான நடவடிக் கைகள் நாடு முழுவதும், துறைகள் தோறும் பரவியுள்ளன. மது விலக்கு பேசப் பெறுகிறது. ஆனால் அதிகாரிகள் கடை நடத்து கிறார்கள். கையூட்டுகள் குற்றங்கள் என்று முழங்கப் பெறுகின்றன. ஆனால் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பணிகளிலும் நுழைய ஆயிரம், பத்தாயிரம், இருபத்தையாயிரம் என்று தொகை புரள் கின்றது. அமைச்சர்கள் வாங்கவில்லை ; ஆனால் அவர்களுக்காக அவர்கள் முகவர்கள் வாங்குகிறார்கள். இந்நிலை பச்சையாக நாடெங்கும் நடைபெறுகிறது. ஏழைகள் விரட்டியடிக்கப் பெறு கின்றனர் இது குடியரசு நாடு என்று பீற்றிக் கொள்ளப் பெறுகிறது. தமிழக ஆளுநரின் அண்மைக் காலப் பேச்சுகளையும் அறிக்கை களையும் பார்த்தாலே இந்நிலைகள் எவ்வளவு வெளிப்படையானவை என்பது விளங்கும்.

வரலாற்றை எவனும் எழுதி அச்சிட்டுக் கொள்ளலாம் என்ப தால், ஆளுக்கு ஒரு வரலாற்றை இவர்களே எழுதத் தொடங்கி, அதில் தங்களைப் பற்றியும், தம் நண்பர்களைப் பற்றியும் 'இந்திரன்' என்றும் 'சந்திரன்' என்றும் எழுதி அல்லது எழுதச் செய்து, நிறை வடைந்து கொள்ளும் தமிழக வரலாற்று எழுத்தாளர்களையும் அவர் களின் பெருமிதத்தையும் என்னென்றுரைப்பது. அரசு நூல் நிலையங் களிலும், படிப்பகங்களிலும் வந்து குவிகின்ற வெற்று நூல்களையும், படியெடுப்பு ஆராய்ச்சிகளையும், பட்டியல் விளக்க வரலாறுகளையும் பார்த்தால் நாம் கூறுகின்ற உண்மை விளங்கும். நூலக நெறியாள ராக ஒருவர் அமர்ந்து கொண்டு, அவர்க்கு வேண்டியவர்களுக்கும், ஈண்டியவர்களுக்கும் ஒன்றுக்குப் பத்தாகவும், வேண்டாதவர் களுக்கும், ஈனாதவர்க்கும் பத்துக்கு ஒன்றாகவும், விலைவைப்பதும், நூல்கள் வாங்கி நிறைப்பதும், அவற்றின் வழித் தம் வீட்டை மாடி யாகவும், மாடியை வளமனையாகவும் செய்வதும் அத் தில்லையம்பல நாயகனுக்கே வெளிச்சம்!

இனி, தமிழில் பாடல் நூல்கள் வந்து குவிகின்றன பாருங்கள்! அடடா! அடடா! எழுதியவை எல்லாமும் பாடல்களே! பாட்டிலக்கியம் அதற்கு வேண்டிய பயிற்சி, இலக்கண அறிவு முதலியன எதுவும் தெரியாமல் தமிழில் பாவலனுகலாம்; அதுவும் உலகப் பாவலனுகவும் ஆகலாம். பாவலர் ஒருவரை ஒர் இதழில் இன்னெரு பாவலர் பாராட்டுகின்ருர் இப்படி: "புறநானூற்றுப் புலவர்களையெல்லாம் புறமுதுகிட்டு ஒடச்செய்யும் புலவன் இவன்" என்று! —எப்படி? பாராட்டு! பாராட்டு என்ருல் ஒரேயடியாக வானத்திற்குத் தூக்கி வைப்பார்கள்! சீராட்டு என்ருல் ஒரேயடியாகக் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள், இக்கால எழுத்தாள 'வள்ளல்கள்'! கட்சிக்காரர்களும் அப்படித்தான். ஒரு கட்சியில் பேசிக் கொண்டிருக்கும் மேடைப் பேச்சாளன் இன்னெரு கட்சிக்கு-ஏதோ சூழ்நிலை வயத்தால்-போய் சேர்ந்தால், அந்தக் கட்சி மேடையிலும் ஒரே பேச்சுத்தான்! ஒரே நடைதான்! ஆனுல் அப்பேச்சுக்குரிய-அந்த நடைக்குரிய ஆள்கள் அல்லது தலைவர்கள்தாம் மாறுபட்டிருப்பார்கள். பூசை ஒன்றுதான்; படிமங்கள் வேறு! உருப்படியில்லாத ஊர்மாறி ஒருவனை 'உலகத் தமிழர்களின் தலைவன்' என்று ஊளையிடுவான் ஒரு மேடையில்! அடுத்த மேடை மாறியதும், கொடி மாறியதும், 'உதிரிகளின் சந்து மாறி' என்பான் மறு மேடையில்! எப்படியிருக்கிறது நம் தமிழர்களின் 'இலக்கிய' வரலாறும், அரசியல் 'வரலாறும்'!

இறுதியாக ஒன்று. (இடமில்லாத கரணியத்தால் மிகமிகச் சுருக்கி யெழுத வேண்டி உள்ளது.) திருக்குறள் அறிவில் ஓர் எள்ளின் மூக்கத்துணையும் பெருத ஒருவர்—திருவள்ளுவர் கடைந்த அறிவுக் கடலின் ஒரு துளி வெண்ணெயும் காணுத ஒருவர்—திருவள்ளுவர் கொண்டைக்கு மேல் தம் கொண்டை வளர்ந்துவிட்டதாகத் தருக்கிக் கொள்ளும் ஒருவர்-திருவள்ளுவரின் கால் செருப்பின் தூசுக்கும் பற்ருத ஒரு 'மேதை'-அவரையும் அவர் குறட்பாக்களையும் 'மூசிய'த்திலே வைக்கச் சொல்லியழுகிருர்! விளங்குகிறதா உங்களுக்கு! 'மூசியம்' என்பது மியூசியம் - Museum என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு—அரும்பொருட் காட்சியகத்துக்கு இவர் கண்டுபிடித்த கலைச் சொல்லாம்! — இந்தப் பெரும்(!) பெயராசிரியத் தமிழர்தாம் தாம் எழுதிய பாடல்(!)களையும், பாரதிதாசனுர் எழுதிய பாடல்களையும் தவிர, பிறர் அனைவருடைய பாடல்களையும் தமிழக அரசு தடை செய்ய வேண்டுமென்று சொன்னுராம்! இவர் பாடல்களையும் அவற்றிலுள்ள கருத்துமிகளையும் பார்த்தால்தான் தெரியும்!

ஐயோ! தமிழனே! உனக்கு எத்துணைக் கொழுப்பு! திமிர்! எத்துணை வெட்கங் கெட்டுப் போய் நீ உலா வருகின்ருய்! நீ இறுதியில் எங்கே போகப் போகிருயோ?

—பெருஞ்சித்திரன்

காசி ஆனந்தன்—சரோசினிதேவி வாழ்க!

தமிழீழ விடுதலைப் பாவலரும், நாட்டு விடுதலைக்காக ஆண்டுக் கணக்கில் சிறையிலிருந்த செம்மலும், தன்னலங்கருதாத தமிழ்நலத் தொண்டரும் ஆகிய திரு. **காசி ஆனந்தன்** அவர்களுக்கும், செல்வி. **சீ. சரோசினிதேவிக்கும்,** கடந்த 6—7—79ஆம் நாள் வெள்ளிக்கிழமை, பகல் 12-மணியளவில், தொண்டமானாறு திருமுருகன் கோவிலில் திருமணம் சிறப்புற நடந்து, அன்று மாலை, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில், தமிழீழத் தலைவர் திரு. **அ. அமிர்தலிங்கம்** அவர்கள் தலைமையில் மணமக்கள் வரவேற்பு விழாவும் நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினர்.

தென்மொழியும் மணமக்கள் நீடுழி வாழ்ந்து, எந்தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் நாட்டிற்கும் அயராத தொண்டாற்றித் தமிழீழம் விடுதலை பெற்றுத் திகழும் முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சீருஞ்சிறப்பும் பேறும் புகழும் நலனும் வளனும் பெறுக வென நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

பண்டாரகர் கோ. தங்கவேலனார் வாழ்க!

'தமிழ்நில வரலாறு' என்னும் அரிய வரலாற்றுத் தனித் தமிழ் நூலை எழுதிய பேராசிரியர். **கோ. தங்கவேலனார்,** தார்வார், கருநாடகப் பல்கலைக் கழகத்தில் (Karnataka University, Dharwar), '**சென்னை மண்டல ஒடுக்கப்பட்ட மக்கள் (1909-1947) —ஓர் அரசியல்—குமுகாய ஆய்வு** (Depressed Classes in the Madras Presidency *(1909-1947)*—A Socio Political, Study) என்னும் தலைப்பில், 1974-77 இடைவெளியில் ஆய்வுசெய்து 1978-ஆகக்தில் இடுநூல் வழங்கிப் **பண்டாரகர் (Doctor)** பட்டம் பெற்றுள்ளார்.

பேராசிரியர் அவர்கள் தூய தமிழ்ப் பற்றுக் கொண்ட செம்மலார். அவர்கள் மேலும் இத்தகைய சிறப்பாய்வுகள் செய்து தாய்த் தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் நாட்டிற்கும் அரிய தொண்டாற்றிப் பெரும் புகழும் பேறும் பெருக என்று பல்லாற்றானும் வாழ்த்துகிறோம்.

அன்பர்கள் கவனிக்க.

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில், மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக்கொண்டு வர வேண்டுகிறோம்.

—**அமைச்சர்.**

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : சஎ

முன்றில் வேங்கை முடக்கிளை நரலோ
டொன்றி யழைத்த ஒருவழி தானும்
இன்றே துணித்தனர் இனியே
மன்றென் றுண்டே மருவயெந் தோளே!

பொழிப்புரை: இல்லத்து முன்புறம் உள்ள வேங்கை மரத்தின் வளைந்த கிளை (இன்னொரு கிளையுடன் உராய்ந்து ஒலிக்கும்) ஓசையோடு ஓசையாகப் பொருந்தி (தலைவியை, நீ விளித்து) அழைத்து, (இது நாள் வரை பழகிய) ஒரே ஒரு வழியினையும், இன்று (அம்மரத்தை வெட்டித்) துண்டித்து விட்டனர் (வீட்டார்). இனி, எம் தோளை மருவுவதற்கு மன்றல் ஒன்று தான் உண்டு.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

இரவுப் பொழுதில் தலைவியுடன் வந்து பழகிய தலைவனிடம், 'நீ, இனி அவ்வாறு பழகுதல் இயலாது; எனவே மணந்து கொள்; என்று தோழி கூறியதாக அமைந்ததிப் பாட்டு.

"வீட்டின் முன் உள்ள வேங்கை மரத்தினது ஒரு கிளை முடம் பட்டு வளைந்திருந்ததால், அது வேறொரு கிளையுடன் மோதிக் காற்று வீசும் பொழுதிலெல்லாம் அக்கிளையுடன் உராய்ந்து ஓர் ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த ஓசையுடன் இணைந்து தலைவியை விளிக்கும் அழைப்போசையைச் செய்ததால், இதுவரை பிறர் அறியாவாறு அவளும் வந்து கொண்டிருந்தாள். நீயும் அவளுடன் கூடி மகிழ்ந்து கொண்டிருந்தாய். ஆனால் இன்று பகலில், வீட்டினர் அம்மரத்தை வெட்டி வீழ்த்தி விட்டனர். இனி உன் அழைப்போசையுடன் இணைந்து ஒலித்த அக் கிளையினோசை எழாது. எனவே தலைவியை நீ அழைக்கவும் இயலாது. அழைப்பின், வீட்டினரும் கண்டு கொள்ளலாம். ஆகவே, இனி நீ இரவில் இவ்விடம் வராதே. தலைவியின் தோளை நீ மருவி மகிழ வேண்டுமாயின், நீ அவளை மணம் செய்து கொள்ளும் வழிதான் ஒன்று உண்டு; அதைச் செய்" என்று, இரவில் தலைவியைப் பார்க்க வந்த தலைவனிடம் தோழி அறிவுறுத்துகின்றாள்.

முன்றில் வேங்கை: வீட்டின் முன்புறம் உள்ள வேங்கை மரத்தின்.

முடக்கிளை நரல்: வளைந்த கிளை இன்னொரு கிளையுடன் மோதிக் காற்றில் அசைய எழுகின்ற ஓசை. நரல்-ஓசை.

ஐந்திணை நுட்பம்

—இரா. முத்துசாமி. திருச்சி.

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி(சு) உந்தீபற
முனையாது மாயையென்(று) உந்தீபற''

—என்பது திருவுந்தியார். இது பற்றியே சிற்றம்பலக் கோவை, ''ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின், காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்'' என்று பாராட்டப் பட்டது. இதன் காரணம் அகத்திணையின் கண் அமைந்துள்ள நுட்பமாதல் வேண்டும். அந்நுட்பம் யாதெனக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப''

என்பது தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல் தொடக்கம்.

''நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே''

என்பது அடுத்த நூற்பா.

நடுவணைந்திணையென்று கூறப்படுவன கைக்கிளை பெருந் திணை நீங்கலாகவுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

(முன்பக்கத் தொடர்ச்சி)

நரலோடு ஒன்றி யழைத்த: தானும் அம்முடக் கிளை எழுப்பிய உராய்வு ஒலியுடன் சேர்ந்து, தலைவியை விளித்து அழைத்த ஒரு வழியையும்.

இன்றே: இன்று பகலிலேயே.

துணித்தனர்: அம்மரக் கிளையையும் அதனால், உன் அழைப்புக் குதவிய வழியையும் துண்டித்து விட்டனர்.

இனியே... ..தோளே!: இனிமேலும் நீ தலைவியை முன்போல் தழுவி மகிழ விரும்புவையாயின், திருமணம் செய்துக் கொள்ளும் வழிதான் ஒன்றுண்டு. எனவே, நீ அவளை விரைந்து மணந்து கொள்வாயாக.

இதில் முடக்கிளை என்றதால் அவ்வோசையுடன் நீ சேர்ந்து அழைத்து அவளைக் கூடுவது தவறான வழி என்றும், மன்றொன் றுண்டே என்றதால், திருமணம் செய்வது ஒன்றுதான் இனிச் செவ்விய வழி என்றும் சுட்டப் பெற்றன.

இது, **குறிஞ்சி** யென் திணையும், **இரவுக் குறிக்கண் வந்து மீண்ட தலைவற்குத் தோழி வரைவு வேண்டியுரைத்தது** என் துறையுமாம்.

என்னும் அன்பின் ஐந்திணைகளாம். இவற்றின் முதற்பொருள் நிலமும் பொழுதும். கருப்பொருள் பல்வேறு பிரிவின. உரிப் பொருள் என்பன ஒழுகலாறுகள். ஆழ்ந்து நோக்குங்கால் முதற் பொருள், கருப்பொருள்கள் இவற்றைக் காட்டிலும் உரிப்பொருளே அகனைந்திணைக் கடிப்படியாயமைந்துளது.

முதற்பொருளான நிலமே முதற் சார்ப்பான காலத்திற்கு முதன்மையாயுள்ளது. ஏனெனில் முதற்பொருளில் நிலனொருங்கு மயங்குதல் இன்று. ஆயின் காலம் மயங்குதற்குத் தொல்காப்பியத்தில் இடம் வகுக்கப்பட்டுள்ளது. எனவே முதற்பொருள் மயக்கத்திற் குரிதாயும் மயக்கத்திற்கு உட்படாததாயும் பிரிவு படுகிறது. கருப் பொருள் மயக்கத்திற்குரியது. ஆனால் உரிப்பொருள் ஒன்று மட்டுமே மயக்கத்திற்குட்படாமல் தெளிந்த நிலையில் உள்ளது.

இவ்வுண்மை,

"திணைமயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலன்நன்குணர்ந்த புலமை யோரே"

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"

என்னும் நூற்பாக்களான் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. எனவே அத்தகு சிறப்பு வாய்ந்த உரிப்பொருளின் அடிப்படையில் அகத்திணை நுட்டம் ஆராயப்படுகிறது.

உரிப்பொருளைத் தொகுத்துக் கூறுங்கால்,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

என்கிறார் ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார்.

முதற்கண் புணர்தல் என்ற உரிப்பொருளைக் காண்போம். இது குறிஞ்சித்திணையின் உரிப்பொருள்.

புணர்தலாவது இயற்கைப் புணர்ச்சி அல்லது தெய்வப்புணர்ச்சி. அஃதாவது தலைவன் மெய்தொட்டுப் பயிறல் முதலாயின தலைவியின் மாட்டு நிகழ்த்திச் சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுங்காலத்து இருவரும் இன்பம் துய்த்தலாம். இது,

"வீழும் இருவர்க் கினிதே வளியிடைப்
போழப் படாஅ முயக்கு" —என்றாற்போல் அமைவது.

புணர்ச்சியின்கண் தலைவனும் தலைவியும் தம்மையுணரார். கால உணர்வும் அவர்கள்பால் இராது. இருவரும் தம்மை இழந்து ஒன்றி யிருப்பார். இந்நிலை இறையும் உயிரும் வேறுபாடு தோன்றாதவாறு இணைந்து நிற்கும் நிலைக் கொப்பானது. இந்நிலை "**ஒன்றாய்**" என்று அறிவு நூல்களில் கூறப்படும்.

அடுத்து வருவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும். இது பாலைத் திணையின் உரிப்பொருள்.

இதன்கண் ஓதல், பகை, தூது, பொருள் இவை பற்றித் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதல். இது,

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"

"பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே"

—என்னும் நூற்பாக்களான் உணர்த்தப்படும்.

இந்நிலை, இயல்பாகவே உயிர் இறையோடு இணைந்திருப்பினும் அறியாமை காரணமாக அதை உணராது பிரிந்திருத்தல் போன்றது. அது போழ்து உயிர் இறையினும் தன்னை வேறுபட்டதாக உணரும். இதனால் உயிர், இறை இவ்விரண்டும் வெவ்வேறு என்றும் உணர்வு மிகுதிப்பட்டு நிற்கும். இந்நிலையை **"வேறாய்"** என அறிவு நூல்கள் வழங்கும்.

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைத்திணையின் உரிப் பொருள். தலைவனைப் பிரிந்த தலைவி அவன் வருமளவும் ஆற்றி யிருத்தல். இதன்கண் தலைவன் "தன்னுடன் இல்லை" என்னும் பிரிவுணர்ச்சி தலைவியின்கண் இல்லை. மாறாக "ஆற்றியிருக்கிறேன்" என்னும் தன்னுணர்வே மிகுதிப்பட்டுத்தோன்றும் இது தலைவனாகிய இறைவன் தன்னை ஆட்கொள்வான் என்று உயிர் எதிர்நோக்கி யிருத்தலை உணர்த்தும்.

இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணையின் உரிப் பொருள். அஃதாவது தலைவி, தலைவன் பிரிவைத் தாளாது தனித்துப் புலம்புதல். முல்லைத்திணையில் தலைவி ஆற்றி இருக்கிறாள். நெய்தல் திணையில் அவ்வாறு ஆற்றமாட்டாதவளாய் இருக்கிறாள். இது பிரிவாற்றாமை என்று கூறப்படும். இதுவே முல்லைத்திணைக்கும் நெய்தல் திணைக்குமுள்ள வேறுபாடு. இந்நிலை, இறையருளை எதிர் நோக்கியுள்ள உயிர், இறை உரிய காலத்தில் அருளாமை கருதி ஆற்றாது புலம்புதலை ஒக்கும்.

ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணையின் உரிப்பொருள். இவ்வுரிப்பொருள் ஏனையவற்றினும் நுட்பமானதும் தலை சிறந்ததும் ஆகும்.

ஊடலின்கண் தலைவியும் தலைவனும் உடன் இருக்கின்றனர். ஆனால் புணர்ச்சி நிகழவில்லை. தலைவனும் தலைவியும் புணர்ந்தும் புணராத நிலையில் இருக்கின்றனர். ஒருவகையில் அவர்களிடம் வேறுபாட்டுணர்வு இல்லை. ஏனெனில் காதலால் உள்ளம் ஒன்றிய வர்கள். ஆயினும் மற்றொரு வகையில் வேறுபாட்டுணர்வுள்ளவர்கள். காரணம் ஊடல் நிகழ்ந்திருக்கிறது.

இந்நிலை, இறையும் உயிரும் இரண்டறக் கலந்தும் கலவாது முள்ள இரண்டற்ற (அத்துவித)நிலைக் கொப்பானது. இதுவே **"உடனாய்"** என்று அறிவு நூல்களில் வழங்கப்படுகிறது.

இவ்வாறு, புணர்தலும் ஊடலும் ஒரு பிரிவின; ஒன்றுக்கொன்று மாறுபட்டன. அவ்வாறே இருத்தலும் இரங்கலும் இன்னொரு பிரிவின; ஒன்றுக்கொன்று மாறுபட்டன. முன்னிரண்டும் தலைவனும் தலைவியும் உடனிருக்கும் காலத்தில் நிகழ்வன. பின்னிரண்டும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கும் நிலையில் நிகழ்வன. இவ்வாறு முன்னிரண்டும் பின்னிரண்டினும் முற்றிலும் மாறுபட்டன.

இவ்விரு பிரிவுகளையும் இணைப்பது "பிரிவு" என்னும் உரிப்பொருள். ஏனெனில் இருத்தலும் இரங்கலும் தலைவன் உடனிருக்கும் காலத்தும் நிகழலாம். அவை பிரிவின் கண்ணே நிகழ்வன என்னு முண்மையை உணர்த்தவே 'பிரிவு' என்னும் உரிப்பொருள் எழுந்தது. அது மற்ற நான்கனுக்கும் பொதுவாய் அமைந்திருத்தலை நோக்குக. இக்காரணம் பற்றியே, பிரிதல் என்னும் பாலைநில உரிப்பொருள் பொதுவானது என்னும் பொருளில், "நடுவண் ஐந்திணை **நடுவணது**" என்றும், "நடுவு நிலைத்திணை" என்றும் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டன.

மேற்கூறிய காரணம் பற்றியே பாலைக்கென ஒரு தனி நிலம் இல்லாது போயிற்று. ஆனால், "முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" என்று சிலம்பில் கூறப்பட்டுள்ளது. இதனை ஒரு சிறிது விளக்குவேன்.

அகனைந்திணைகளில் குறிஞ்சித்திணையும் முல்லைத்திணையுமே முதன்மைத்திணைகள். குறிஞ்சியாவது புணர்தலும் புணர்தல் நிமித்தமும். குறிஞ்சித்திணை திரிபடைகின்றது. அப்போது அஃது ஊடலாகி மருதத்திணையாகிறது. பிரிவென்னும் பாலையாகாதோ வெனின், ஆகாது; காரணம் குறிஞ்சி திரிந்து மருதமாகும் போதும் குறிஞ்சித்திணையிலுள்ளபடியே தலைவன் தலைவி இருவரும் உள்ளனர். பாலையில் அவ்வாறு இல்லாமை ஓர்க. இனி தலைவி மட்டும் தனித்து ஆற்றியிருக்கும் முல்லைத்திணை திரிபடைந்தால் தலைவி மட்டும் தனித்து ஆற்றுது புலம்பும் நெய்தல் திணையாகும். இவ்வாறு முல்லை, குறிஞ்சித் திணைகளில் திரிபு நிகழுங்காலத்து திரிபுக்குத் துணைநிற்பது பிரிதலாகிய பாலைத்திணையே. அதனாலேயே அது பொதுவாய் வைக்கப்பட்டதென்க. இவ்வாறு மேற்கூறிய சிலம்பின் வரிகளில் நிலத்தின் திரிபு மட்டும் உணர்த்தப் படவில்லை. ஒழுகலாற்றுத்திரிபே முதன்மையாக வலியுறுத்தப்படுகிறது. அதன் காரணமாகவே பாலைத்திணை தோன்றுதல் காண்க.

இவ்வாறு அன்பின் ஐந்திணைகளும் நுட்பமான தன்மையைத் தன்னகத்துக் கொண்டிருப்பதாலேயே அவை சமய உண்மைகளை விளக்கவும் திருக்கோவை போன்ற நூல்களுக்கு நிலைக்களனுக அமைந்தன என்றும் உய்த்துணர்க.

o

இந்தியை எதிர்க்கிறோம்; எதிர்ப்போம்! ஆனால், தமிழை வாழவைத்தோமா?

'இந்திய அரசின் தலைநகரான தில்லியில் வண்டி, ஊர்திகளுக் கெல்லாம் இந்தியில் எண் தகடு (Number plate) போடுகிறார்கள். இது நயமற்றது. இதைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள் வோம். பெயர்ப் பலகைகள், எண் தகடுகள் முதலிய எல்லாவற்றிலும் இந்தியையே பயன்படுத்துவதன் வழி, தில்லி எல்லா மாநிலங் களுக்கும் தலைநகரன்று; இந்திக்காரர்களுக்கு மட்டுமே தலைநகர் என்று அவர்கள் அறிவிக்கிறார்கள். அது நல்லது தானே!

சரி, அதற்கு நம் விடை என்ன? ஐயோ எல்லாவற்றிலும் இந்தியைப் புகுத்துகிறார்களே என்ற பெண்மைத்தனமான அழுகையா? 22 மாநிலங்களுக்கும் பொதுத் தலைநகரான தில்லியி லேயே ஒருதலைப் பக்கமாக இந்தியைப் புகுத்துகிறார்கள் என்றால், தமிழ்நாட்டுக்கு மட்டுமே தலைநகரான சென்னையை முழுக்க முழுக்கத் தமிழ் வண்ணமாக்க வேண்டாமா? இங்கும் எல்லா வண்டிகள், ஊர்திகளிலும் தமிழ் மட்டுமே இடம்பெறச் செய்வதன்றோ அதற்கு மாற்றடி கொடுப்பதாகும்.

அதற்கு முதற்படியாகத் தமிழிலே பெயர்ப்பலகைகள் வைக்காத கடை கண்ணிகளை—நிறுவனங்களை அடித்து நொறுக்க அணியமா? தமிழ், தமிழ் என்று மேடையிலே முழங்கும் அரசியல் கட்சிக் காரர்களின் வீடுகள், அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள் இவற்றி லேயே தமிழ் இல்லாதபோது மற்ற இடங்களுக்கு எப்படிப் போவது?

இழிவு! தமிழ்நாட்டிலேயே பிறந்து, தமிழ்நாட்டிலேயே வாழ்ந்து, தமிழ்நாட்டிலேயே மடியப் போகும் தடித்த தோலுடைய தமிழர்கள் பலரும், தங்கள் பெயர்களின் முன்னெழுத்துகளைத் தமிழில் போட்டுக் கொள்ள முன்வராத பொழுது, தமிழில் கையெழுத்துப் போடுவதே இழிவு என்று கருதும்பொழுது, பிழையாகாவேனும் ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடுவதையே பெருமை என்று கருதுகிறபொழுது, தமிழ்நாட்டில் தமிழுக்கு முதலிடம் தராதது வெட்கக்கேடு என்று உணரவா போகிறார்கள், இவர்கள்?

எல்லா மொழி பேசுவோருக்கும் பொதுவான நாடாளு மன்றத்தில் இந்திக்காரர்கள் அல்லாதவர்கள் ஆங்கிலத்தில் பேசினால் கூட, 'இந்தியில் பேசு, இந்தியில் பேசு' என்று ஆங்கிலம் தெரிந்த இந்திக்காரர்கள்கூட விடாப்பிடியாகக் கலவரம் செய்கிறபொழுது, தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரிமையான சட்ட மன்றத்திலும், மேலவை யிலும் தமிழறிந்தும், திமிர் பிடித்த சிலர் வல்லடி வழக்காக ஆங்கிலத்தில் பேசும்பொழுது, ஒதிய மரங்களாய், ஓணான், பூச்சிக ளாய் உட்கார்ந்திருக்கிறார்களே, இவர்களைத் தாங்கிக் கொண்டிருப்

பதற்குத் தமிழ் மண்ணன்றே வெட்கப்பட வேண்டும்! இந்தித் திணிப்பை எதிர்ப்பது நடுவணரசு ஆளுமைகளில்- இந்தி பேசாத மாநிலங்களில் என்றுல் அது முறை; நயன்மையுங் கூட! ஆனுல், இந்தி பேசும் மாநிலங்களில் அவர்கள் தாய்மொழியைப் புகுத்துவதை எப்படித் தவறென்று சொல்ல முடியும்? தமிழ்நாட்டில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் ஆக்குவதற்கு நமக்குத் தகுதி இல்லையென்றுல், எவனுலும் தமிழ் நாட்டில் பிழைக்க வேண்டுமென்றுல், தமிழில் குறைந்த பக்கத் தகுதியாவது இருக்க வேண்டும்; அஃது இல்லாத வனுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லையென்று சொல்ல நமக்குத் தென்பில்லை, திறனில்லை, என்றுல், நாம் தமிழ் தமிழ் என்று கத்துவ தெல்லாம் வெளிப் பகட்டுதான் என்றுல், நம் உடம்பில் உள்ளபடி தமிழ்க்குருதி ஓடவில்லையென்றுல், நம்மைப்போல் மற்றவர்களும் தம் தம் தாய்மொழியைப் புரக்கக்கூடாது என்று எதிர்ப்பார்ப்பதா? தான் தின்னுன்பிறரையும் தின்னவிடான் என்ற மண்ணுங்கட்டி மனப் பான்மை உறுதியாகப் பரந்த மனப்பான்மையாகி விடாது.

ஒருவன் தன் தாய்க்கு நன்றியுள்ள பிள்ளையாக இருக்கவில்லை என்பதற்காக—மனைவிக்கு உண்மையுள்ள கணவனுக நடக்கவில்லை என்பதற்காக, எதிராளியும் அப்படியிருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது கடைந்தெடுத்த கயமைத் தனமாகும். திரும்பவும் சொல் கிறேம்; இந்தியை நடுவணரசு நிலைகளில் எதிர்ப்பது வேறு; இந்தி பேசும் மாநில நிலைகளில் எதிர்ப்பது வேறு. முதலாவதில் நம் எதிரடி இன்னும் தீவிரமானதாக இருக்க வேண்டும்; அதற்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை யென்றுல், நம்முடைய இறுதி நடவடிக்கை நடுவணரசே இல்லாமல் செய்ய வேண்டும். இரண்டா வதில், நம்முடைய எதிர் நடவடிக்கை இங்கு எல்லாத் துறைகளிலும் தமிழைத் தவிர, வேறு மொழிக்கு இடமில்லை என்று செய்யவேண்டும். தமிழ் அறியாதார்க்கு—தமிழில் முடியாதார்க்குந் தமிழ்நாட்டில் எத்துறையிலும் வேலையில்லை என்ற நிலையை உடனடியாக உருவாக்குதல் வேண்டும். அதை விட்டு விட்டு, இந்திக்காரர்களுக்கு இந்தி மொழி மீதுள்ள பற்றளவுக்குக் கூட, நமக்குத் தமிழில் பற்றில்லை என்பதை நமது இந்தியெதிர்ப்பின் மூலம் உலகத்திற்குத் தம்பட்டமடிக்கக் கூடாது. நமது வீட்டைத் திறந்து போட்டுக் கொண்டு, அடுத்தவன் அவன் வீட்டைப் பூட்டுகிறுனே என்று கூப்பாடு போடுவது நமது ஏமாளித் தனத்தைப் புலப்படுத்துமே தவிர, அடுத்தவனைக் கெட்டவன் என்று உலகத்திற்குக் காட்டி விடாது. பொது இடத்திற்கு அவன் வேலி போட்டுப், பூட்டு மாட்டு கிறுன் என்றுல், அதை எதிர்க்கலாம்; எதிர்க்கிறேம். இன்னும் கடுமையாக எதிர்ப்போம். அப்போதும் நம் இடத்தை, அது திறந்து கிடப்பதால், யார் யாரோ கவர்ந்து கொள்ள அதை இழுத்துப் பூட்டு முன், பொது இட வன்கவர்பை நாம் கண்டிக்க முற்பட்டால், நம் ஏமாளித்தனத்தை மட்டுமன்று, கோமாளித் தனத்தையும் உலகத் திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகும்.

என் இலங்கைச் செலவு.

பெருஞ்சித்திரனார்.

11. இன்றைய நிலையில் இலங்கை.

இவ்வாறு, பலவகையிலும் தமிழர்கள் வாழ்ந்திருந்த, அவர்களின் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்த தொன்மை நிலமாகிய இலங்கை, தமிழர் கைகளினின்று சிங்களவர் கைக்கு வருவதும், பின் சிங்களவர் கைகளினின்று தமிழர்கைக்கு மாறுவதுமாக இருந்து, அதன் பின்னர் கடந்த 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து போர்த்துக்கீசியர், ஆலந்துக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் கைகளில் தவழ்ந்து, இறுதியில், இன்று சிங்களவர் கைகளில் வந்து தங்கியள்ளது. ஆங்கிலேயர்கள் ஆட்சி1796 முதல் 1948 வரை இருந்தது.

இறுதியாகப் பிரிட்டிசுக்காரர்கள் ஆளும் போதுதான், பல அதிகார ஆளுமை ஏந்துகளுக்காக, 1833-ஆம் ஆண்டு, சிங்களவர் ஆளுகையிலிருந்த சிறிலங்காவையும், தமிழர்கள் ஆளுமையிலிருந்த தமிழ் ஈழப் பகுதியினையும்—முதன் முதலாக ஒரே ஆளுமையின் கீழ்க் கொண்டு வந்தார்கள். அதன்பின் 1948-இல் அவர்கள் இலங்கையை விட்டு நீங்கும் பொழுது, எப்படி இவ்விந்திய நாட்டை அவர்கள் வட நாட்டுக்காரர்கள் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போனார்களோ, அதே போல் அவர்கள் சிங்களவர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போய்விட்டனர். இலங்கையைப் போர்த்துக்கீசியர் கைப்பற்றும் வரை, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழராட்சியும் அங்கு இருந்துதான் வந்தது, கி. பி. 1070 வரையிலும் கூட இராசேந்திர சோழன் இலங்கை முழுவதையும் ஆட்சி செலுத்தி வந்த வரலாறு உண்டு. சிங்கள இனத்தின் மூலவர்களாகக் குறிக்கப் பெறும் விசயனும் அவனைச் சேர்ந்தவர்களும் இத்தீவில் காலடி எடுத்து வைத்த பொழுது தமிழர்கள் இலங்கையின் நிலப்பரப்பெங்கும் பரவலாக வாழ்ந்திருந்தனர். விசயன் அப்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்கு இரண்டு கருவிகள் இருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும். ஒன்றை மட்டுந் தான் பயன் படுத்துகிறோம். இன்னொரு கருவி இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழ்த் திணிப்பை விரைவு படுத்துவதாகும். தமிழ்நாட்டில் தமிழ்த் திணிப்பா, என்று சிரிக்கலாம்; சிரிப்புக்குரியதுதான் அது. ஆனால் தமிழ்நாட்டில் பிழைக்கும்—தமிழை விற்றுப் பிழைக்கும்—ஒரு கூட்டம் அதை அப்படித்தானே சொல்லுகிறது!

அதைச் செயலில் காட்டுவோம். அந்தக் கூட்டத்திற்கு அது பிடிக்கவில்லையென்றால், தமிழ்நாட்டை விட்டு அது வெளியேறட்டும்.

—**தீக்கண்ணன்**. ('நன்றி'. **மர்மம்**-மலர் 3. இதழ்-5)

பொழுதிருந்த ஒரு பாண்டியனின் மகளையே மணந்து கொண்டான் என்பர். அதன் பின்னர் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வந்து தங்கி வாழலாயினர். சிங்களவர்கள் தெற்குப் பகுதியிலும் தென் மேற்குப் பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்து வந்தனர்.

இலங்கையில் போர்த்துக்கீசியரின் ஆட்சி கி.பி. 1619 முதல் 1638 வரையில் இருந்தது. அதன் பின் ஆலந்துக்காரர் போர்த்துக்கீசியரைப் படிப்படியாக விரட்டி விட்டு 1795 வரை ஏறத்தாழ நூற்று எழுபது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இறுதியாக 1796 முதல் 1947 வரை, நூற்றைம்பது ஆண்டுகள், பிரிட்டிசுக்காரர்கள் இலங்கை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டு வந்தனர். பிரிட்டிசாரின் ஆட்சிக் கால இடையில் அஃதாவது 1829 இல்தான் இலங்கையில் சிங்களவர்களையும். தமிழர்களையும் தனித்தனியாக ஆண்டு வந்த இரட்டையாட்சி முறையை, ஆளுமை ஏந்துகளுக்காக, ஒற்றையாட்சி முறையாக அமைக்கக் 'கோல்புறுக்' ஆணைக்குழு ஒன்றை அமைத்து, இலங்கையைப், பல மாவட்டங்களாகக் பிரிக்கவும், ஒரே நயன்மை (நீதி) அமைப்பாக இணைக்கவும் முயற்சிகள் தொடங்கப் பெற்றன. அதன்படி 1833-இல் ஒற்றையாட்சி முறைக் கொண்டு வரப்பெற்றது. 1948 பிப்ருவரி 4-ஆம் நாள் பிரிட்டிசுக்காரர் இலங்கையிலிருந்து, தங்கள் ஆளுமையைப் பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போன பொழுதும், இந்த ஒற்றையாட்சி முறை அப்படியே தொடர்ந்தது. அதற்குப் பின் சிங்களவர்கள் தங்களின் பெரும்பான்மை வலிவைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நிலப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதும், மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைப்பதும், தங்கள் மொழிக்குப் பலவகை ஏற்றங்கள் தேடுவதும், தங்கள் இனத்தாரையே படைத்துறை, ஆளுமைத்துறை போன்றவற்றில் அமர்த்தித் தங்கள் வல்லாண்மையைப் பெருகச் செய்வதுமான முயற்சிகளில் ஈடுபட்டுத் தமிழ் மொழியையும் தமிழினத்தையும் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளி, வலிவிழக்கச் செய்து வந்தனர்; வருகின்றனர். இதுபற்றிப் பின்னர் பார்ப்போம்.

இக்கால் உள்ள இலங்கை 25,332 சதுரக் கற்கள் கொண்ட நாடு. இன்றைய நிலையில் இதன் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடியே முப்பத்தைந்து இலக்கம். இதில் தமிழர்கள் ஏறத்தாழ 28 இலக்கம் பேர். இது, இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழருமாக சேர்ந்த தொகையாகும். இலங்கைத் தமிழர்கள் என்பவர்கள் தொன்மைக் காலம் முதல் இலங்கையிலேயே இருந்துவரும் குடிமரபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏறத்தாழ 15 இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் மன்னர், யாழ்ப்பாணம், திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு முதலிய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இந்தியத் தமிழர்கள் எனப்படுபவர் ஏறத்தாழ 13

இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் கண்டி, நுவரேலியா, மாத்தளை, கேகாலை முதலிய (நாட்டின் நடு பகுதியான) மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்று அழைக்கப் பெறுகிறார்கள். இந்தியத் தமிழர்கள் எனப்பெறும் இம் மலைநாட்டுத் தமிழர்கள் பெரும்பாலும், பிரிட்டிசுக்காரர்களின் ஆட்சிக் காலத்தில், 1837-இலும் அதற்குப் பின்னும்மலைப் பகுதிகளில் உள்ளத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென்று தமிழகத்தின் சிற்றூர்ப் புறங்களினின்று கங்காணிகளால் ஏமாற்றி அழைத்துச் செலலப் பட்டவர்களாகும். இவர்கள்தாம், அன்றிலிருந்து இன்று வரை தேயிலைத் தோட்ட ஆங்கிலேய, சிங்கள முதலாளிகளால் அடிமைகளைப் போல் நடத்தப்படுபவர்கள். இவர்களுக்குக் குடியுரிமை கிடையாது. நல்ல வீடு வாய்ப்புகள் இல்லை. வாழ்க்கை ஏந்து களற்ற நிலையில் விலங்குகளைப் போல் தோட்டக் காடுகளில் சிறு சிறு, ஓட்டைக் குடியிருப்புகளில் வாழ்கின்ற தமிழர்கள் இவர்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து குடியேறிச் சென்ற தமிழர்களாயிருந்தாலும் இலங்கைத் தமிழர்களுடன் இனத்தாலும் மொழியாலும் பண்பாட்டினாலும் தொடர்பும் பிணைப்பும் உடையவர்கள். இன்று இலங்கையில் மிகக் குறைவான ஊதியம் பெறுபவர்கள் இவர்களே. இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் ஏறத்தாழ 60 விழுக்காட்டு வருமானம் இவர்கள் வழியாகவே பெறப் படுகின்றது எனினும், அங்குள்ள மக்களிலேயே மிகமிகப் புறக்கணிக்கப் பட்ட மக்களாகவும், ஒதுக்கப்பட்ட மக்களாகவும், மிகவும் பிற்படுத்தப் பட்ட நிலையில் உள்ளவர்கள், இம்மலை நாட்டு இந்தியத் தமிழர்களே. இவர்களின் வெயில் மழை பாராத கடுமையான உழைப்பால்தான், அங்குப் புதிய புதிய தோட்டங்கள் பல உருவாகின; குடியிருப்புகள் எழுந்தன. இந்தியத் தமிழர்களாகிய இவர்களை ஆங்கில அரசு தேயிலை, தொய்வ(இரப்பர்)மரக் காடுகளில் வேலை செய்ய அழைத்துச் சென்ற பொழுது, வழியிலேயே பலவகைத் தொற்று நோய்களால் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மாண்டனர். இலங்கைத் தோட்டங்களில் பணிசெய்வதற்கென்று இவர்களை அழைத்துச் செல்கையில், இலங்கையில் வாழும் ஏனைய மக்களுடன் சரிசமமான எல்லா வகை வாழ்வுரிமைகளும் வழங்கப்படும் என்ற உறுதி மொழி கூறியே வஞ்சகமாக இவர்கள் இறக்குமதி செய்யப் பட்டனர். ஆனால், இன்று இவர்களின் நிலை பெரிதும் இரங்கத் தக்கதாயும் அவலம் மிக்கதாயும் உள்ளது. இவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள் இல்லை. பெரும்பாலானவர்களுக்கு படிப்பறிவே இல்லை. இவர்களையெல்லாம் சேர்த்துப் பிடித்துதான் 'இலங்கைத் தொழிலாளர் பேராயம்' (காங்கிரசு) என்று ஒரு கட்சியேற்படுத்தி, இங்கிருந்து குடியேறிய இந்தியத் தமிழரான திரு. **தொண்டைமான்** என்பவர் அக்கட்சியின் தலைவராக இருந்துக் கொண்டு, அம் மலைத் தோட்டத் தமிழர்களுக்காகப் பாடுபட்டு வருவதாகக் கூறி வருகிறார். இவர் ஆளுங்கட்சியாக உள்ள சிங்களவர்களுக்குச்

சார்பாக உள்ளதால், இன்று ஏராளமான மலைத் தோட்டங்களுக்கு உரிமையாளராகவும் நல்ல செல்வ நிலையிலும் வாழ்ந்து வருகிறார்.

மற்று, யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டின் பழங்குடி மக்கள். இக்கால் சிங்களவர்களால் தமிழர்கள் என்று குறிக்கப் படுபவர்கள், இந்த இருவகைத் தமிழர்களையும் சேர்த்தே கூறப்படுகிறார்கள். இந்த யாழ்ப்பாணப் பகுதித் தமிழர்களின் சார்பாகவே திரு. **அமிர்தலிங்கம்** அவர்களைத் தலைவர்களாகக் கொண்ட 'தமிழர் விடுதலை முன்னணி' என்னும் கட்சி இயங்கி வருகிறது. எனினும், இக்கட்சி இந்த இருவகைத் தமிழர்களுக்கும் சேர்த்தே விடுதலை கோரி வருகிறது. தமிழர்கள் தாங்கள் இடைக்காலத்தில் வாழ்ந்து தனித்து முழு இறைமையுள்ள அரசாக ஆண்டு வந்ததைப் போலவே, இன்றும் அந்நிலப்பகுதிகளைத் தனியாகப் பிரித்துத் தமிழர்களே ஆளவேண்டும் என்பதே திரு. அமிர்தலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட தமிழர் விடுதலை முன்னணிக் கட்சியின் கோரிக்கையாகும். இதுபற்றியும் பின்னர் விரிவாக எழுதுவோம்.

தமிழர்களைத் தவிர, இப்பொழுது பிரிட்டிசுக்காரர்களால் வந்து வாய்த்த அரசைக் கைப்பற்றியுள்ள சிங்களர்களும் இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறார்கள். கீழ்நாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் எனப்படுபவர்கள் அவர்கள். கீழ்நாட்டுச் சிங்களவர்கள் என்பவர்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தரை, அம்பாந்தோட்டை முதலிய மேற்கு, தெற்கு நகர்ப்புற மாகாணங்களில் வாழ்பவர்கள். கண்டிச் சிங்களவர்கள் எனப்படுபவர்கள் இந்தியத் தமிழர்களைப் போலவே கண்டி, மாத்தளை, நுவரெலியா, வதுளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் முதலிய மலைப்பகுதி மாகாணங்களில் வாழ்பவர்கள். இவர்களும் தோட்டத் தொழிலாளர்களே. கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் பெரும்பாலும் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழர்கள் இவர்களாலேயே பெருத்த அழிவுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளானார்கள்.

இவ்விரு பேரினங்கள் தவிர, மூர்கள், மலாய்க்காரர்கள், பறங்கியர்கள் ஆகியோரும் மிகச் சிறுபான்மையினராக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வினப் பாகுபாடுகளெல்லாம் ஆங்கில அரசாட்சிக் காலத்திலேயே வகுக்கப்பட்டனவாகும்.

இனி, சமயங்களைப் பொறுத்த அளவில், இலங்கையில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் (67.3 விழுக்காட்டினர்) புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் சிங்களவர்களே. இந்துக்கள் 17.6 விழுக்காட்டினர். இவர்களனைவரும் இந்து சமயத்தைக் குறிப்பாக சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். கி.மு 5-ஆம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோன் என்று கருதபடும் விசயன் வருவதற்கு முன்பே, இங்குச் சைவ மதம் மிகச் செழிப்பாக வளர்ந்தோங்கியிருந்தது என்று, வரலாற்று நூல்கள்

தெரிவிக்கின்றன. அதற்குச் சான்றாக திருக்கேதீசுவரம், முனீசுவரம், தொண்டீசுவரம், திருக்கோணேசுவரம், நகுலேசுவரம் ஆகிய ஐந்து புகழ்மிக்க சிவத்திருவிடங்கள் இங்கு உண்டு.

இசுலாம் மதம் இங்கு இந்து மதத்திற்கு அடுத்த மதமாக உள்ளது. இங்குள்ள மக்களில் 7.1 விழுக்காட்டினர் இசுலாம் மதத்தைச் சார்த்தவர்கள். இம்மதத்தைச் சார்ந்த முசுலிம்கள் அனைவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களே. இவர்கள் இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள். கிழக்கு மாகாணம், கொழும்பு, புத்தளம், மன்னார் ஆகிய இடங்களில் பெரும் எண்ணிக்கையாக நெருங்கியும் வாழ்கின்றனர்.

கிறித்துவ மதத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள கிறித்தவர்களில் 7.1 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர். 0.8 விழுக்காட்டினர் பிற கிறித்துவ மதத்தைச் சார்ந்தவராவர். இவர்களல்லாத பிற மதத்தினர் மிகமிகச் சிறுபான்மையரான 0.1 விழுக்காட்டினரே.

பொதுவாக இலங்கைத் தமிழர்கள் மன்னார், வவுனியா, மட்டகளப்பு ஆகிய இடங்களில் அவ்விட மக்கள் தொகையில் பகுதிக்கு மேலும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 94.9 விழுக்காட்டளவிலும், திருகோணமலையில் 35 விழுக்காட்டளவிலும், அம்பாறையில் 22 விழுக்காட்டளவிலும் வாழ்கின்றனர்.

அரசியல் முறையில் இலங்கை, இக்கால் 24 ஆளுமை மாவட்டங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. இவை 9 மாநிலங்களாக (மாகாணங்களாக) வகுக்கப் பெறுகின்றன. அம்மாகாணங்களும், அவற்றுள் அடங்கிய மாவட்டங்களும் வருமாறு:

1) மேல் (மேற்கு) மாகாணம்: (மாவட்டங்கள் மூன்று)
1. கொழும்பு (Colombu); 2. களுத்துறை (Kalutara); 3. கம்பகா (Kambaka).

2) நடு மாகாணம்: (மாவட்டங்கள் மூன்று)
4. கண்டி (Kandy); 5. மாத்தளை (Matala); 6. நுவரேலியா (Nuwara-Eliya).

3) தென் மகாணம்: (மாவடடங்கள் மூன்று)
7. காலி (Galle); 8. மாத்தறை (Matara); 9. அம்பாந்தோட்டை (Hambantota).

4) வட மாகாணம்: (மாவட்டங்கள் நான்கு)
10. யாழ்ப்பாணம் (Jaffna); 11. மன்னார் (Mannar); 12. வவுனியா (Vavuniya); 13. முல்லைத்தீவு (Mullai Tiv).

5) கிழக்கு மாகாணம், (மாவட்டங்கள் மூன்று)
14. மட்ட களப்பு (Batticaloa); 15. அம்பாறை (Amparai); 16. திருகோணமலை (Trincomalee);

6) வடமேல் மாகாணம்: (மாவட்டங்கள் இரண்டு)
17. குருநாகல் (Kurunegala); 18. புத்தளம் (Puttalam).

7) வட நடு மாகாணம்: (மாவட்டங்கள் இரண்டு)
19. அநுராதபுரம் (Aaurathapuram); 20. பொலநறுவை (Polonnaruwa).

8) ஊவா மாகாணம்: (மாவட்டங்கள் இரண்டு)
21. வதுளை (Badulla); 22. மொனருகலை (Moneragala).

9) சுப்பிரகமுவா மாகாணம்: (மாவட்டங்கள் இரண்டு)
23. இரத்தினபுரி. (Ratnapura); 24. கேகாலை. (Kegalle).

இவற்றுள் வடமாகாணம், கிழக்கு மாகாணம், நடு மாகாணம், முதலிய இடங்களில் தமிழர்கள் பேரளவிலும், மற்ற பகுதிகளில் சிங்களவர்கள் பேரளவிலும் வாழ்கிறார்கள்.

இக்கால், ஆட்சி சிங்களவர் கைக்குள்ளிருப்பதால் அங்குள்ள தமிழர்களை மொழி, இன ஆளுமைகளால் ஒடுக்கவேண்டும் என்று திட்டமிட்டு, தமிழர்கள் பெரும்பாலும் வாழும் இடங்களில் எல்லாம் சிங்களவர்களைப் பெருமளவில் குடியேற்றும் வேலை அரசின் ஆதரவுடன் நேரிடையாகவும் மறைமுகமாகவும் நடைபெற்று வருகிறது.

1921-ஆம் ஆண்டில் தமிழர் பகுதிகளான வடக்கு மாகாணங்களில் வாழ்ந்திருந்த சிங்களவர்கள் தொகை 11,040ஆக இருந்தது. இது 1946-இல் நான்கு மடங்காக வளர்ந்து, 1971-இல் 2,36,869 ஆக, அஃதாவது 21 மடங்காகப் பெருகிவிட்டதென்றால், தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களை அரசு எப்படித் திட்டமிட்டுக் குடியேற்றியது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இக்கால், இந்நிலை இன்னும் கேடாகப் போய்க் கொண்டுள்ளது. 1824-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இலங்கைத்தீவில் சிங்களவர்கள் எண்ணிக்கை மொத்தம் 6,56,243. (இதில் கரையோரச் சிங்களவர்கள், கண்டிச் சிங்களவர் ஆகிய இரு வகையினரும் அடங்குவர். அக்கால் தமிழர்கள் எண்ணிக்கை 1,95,697. அஃதாவது தமிழர்கள் மொத்தத்தில் 23 விழுக்காட்டினர். இவ்விழுக்காடு 1971-ஆம் ஆண்டில் 12 விழுக்காடாகக் குறைந்து போனது என்பதைப் பார்க்கையில், தமிழர்கள் எவ்வளவு அழிவுக்குட் பட்டிருக்கிறார்கள்; அல்லது சிங்களவர்களாக மாற்றப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

ஓர் இனத்தை இன்னோர் இனத்தவர் நிலையான அடிமைத் தனத்திற்கு அல்லது ஆளுமைக்கு உட்படுத்த வேண்டுமானால் மூவகை முயற்சிகள் செய்யப்படுதல் வேண்டும். ஆளப்படும் இனத்தின் மொழி நிலை சிதைக்கப் படுதல் முதல் முயற்சி. அதையடுத்து இரண்டாவது முயற்சியாக அந்த இனத்தின் மக்கள் வாழ்கின்ற இடங்களில் ஆளும் இன மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றிப் பரந்து பட்டு வாழ வழி செய்தல் வேண்டும். மூன்றாவது முயற்சி

புற்றுநோய் என்றால்
சாவு என்று பொருளன்று!

மருத்துவர் இலியான் சாபாது.

(ஐ. நா. பரிசு பெற்ற புற்றுநோய் இயல் அறிஞர்)

புதிய மருத்துவத்துறையின் மிகக் கொடுமையான நோய் புற்றுநோய். எனினும் முன்னெப்போதையும் விட, இன்று இந்த நோயைப் பற்றிய பல விளக்கங்கள் நமக்குக் கிடைப்பதால், அது குறித்து நாம் அத்துணை அஞ்ச வேண்டியதில்லை. புற்றுநோய் உண்டாக்கும் சில வேதியல் பொருள்களையும், நச்சுயிரிகளையும் பற்றி இன்று நாம் அறிவோம். அஃதன்றி, கதிர் வீச்சும் கூட அந்நோயை ஏற்படுத்துகிறது என்றும் நாம் அறிந்துள்ளோம். புற்றுநோய்க் கண்ணறைகளின் பல சிறப்புத் தன்மைகளையும், அவை ஓர் உறுப்பை எவ்வாறு தாக்குகின்றன உயிர்க் கண்ணறைகளுடன் அவற்றின் இணைத்தொடர்புச் செயல்கள் எவை என்பன குறித்த விளக்கங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. எனினும் இயல்பான, நலந்தரும் கண்ணறை நுண்ணுயிர்கள், ஏன் புற்றுநோய் நச்சுயிர்களாக மாற வேண்டும் என்ற விளக்கம் இன்னும் கிடைத்தபாடில்லை. என்றாலும் கூட, நாம் இன்று அந்நோயைத் தடுத்துவிட முடியும்; குணப் படுத்தவும் முடியும்.

பல்லாண்டுக் கால ஆராய்ச்சிகளின் பயனாக, ஒரு செய்தி நன்கு தெளிவாகியுள்ளது. புற்றுநோய் திடீரெனத் தோன்றிவிடுவதில்லை. இயல்பான நுண்ணுயிர்கள், புற்றுநோய் நுண்ணுயிர்களாக மாறு வதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கின்றன. புற்றுநோயின் முதல் அறிகுறிகள் ஓர் உடலில் தோன்றுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே, அந்த உடலில் நோய் மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டு தானுள்ளது என்பதைக் காணும்போது, இந்த இடையூறான போக்கைச் சற்றுக் கவனம் செலுத்தினால், முளையிலேயே கிள்ளி எறிவது இயல்வதுதானே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஆளுமை முயற்சி. அஃதாவது ஆள்கின்ற இனத்தின் மொழி, கல்வி, அதிகாரம் முதலியவை சிறந்தோங்குவதற்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

இந்த மூன்று வகையான முயற்சிகளையும் இன்று இலங்கையில் தமிழர்களின் வலிமையை ஒடுக்குவதற்கான முயற்சிகளாகச் சிங்களவர்கள் செய்து வருகிறார்கள். இந்தியாவில் தமிழர்களின் வலிமையைக் குறைப்பதற்கு எப்படி, சமசுக்கிருதம், (இக்கால் இந்தி) மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுத்தப்பட்டதோ, (இக்கால் திணிக்கப் படுகிறதோ), அப்படி இலங்கையில் சிங்களம் ஆட்சி மொழி, தேசிய மொழி என்னும் பெயரால் புகுத்தப் பெறுகிறது அல்லது திணிக்கப் பெறுகிறது. (தொடரும்)

ஆக, புற்றுநோய் திடீரெனத் தோன்றிவிடும் ஒரு நோய் அன்று. பொதுவான கட்டிகள், நீண்ட நாட்களாக ஆறுமலிருந்தால் அவை புற்றுநோய்க் கட்டிகளாக மாறக்கூடும். பொதுவான நாட்பட்ட கட்டியொன்றை, ஒரு நோயாளி, மருத்துவரிடம் காண்பிக்கும்போது, 50 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த மருத்துவர், நோயாளி எத்தகைய கவலையும் கொள்ள வேண்டாம் என்றே கூறி வந்தார். ஆனால் இன்று, மருத்துவர்கள், அத்தகைய கட்டியையும் நன்கு ஆராய்வதற்காக, நோயாளியைப் புற்றுநோய்க் கூடத்திற்கு அனுப்புகின்றனர்.

நாட்பட்ட வேறு சில நோய்களும், புற்றுநோயாளிகளிடம் இருந்துள்ளதை புள்ளி விளக்கங்கள் காட்டுகின்றன. சோவியத்து புற்றுநோய் ஆய்வுக்கூடம் கண்டறிந்துள்ளபடி, வாய்ப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளவர்களில் 84 விழுக்காட்டினருக்கும், தோல் புற்று நோயாளிகளில் 97 விழுக்காட்டினருக்கும், மலக்குடல் புற்று நோயாளிகளில் 73 விழுக்காட்டினருக்கும், நாட்பட்ட நோய்கள் இருந்துள்ளன.

பண்டுவமும் நோய்த்தடுப்பும்: 15 ஆண்டுகளுக்கு முன்னர், குணப்படுத்தப்பட்ட புற்றுநோயாளிகளைக் காண்பது அரிது. இன்றோ, ஏறக்குறைய 15 இலக்கம் பேர், சோவியத்து ஒன்றியத்தில் புற்றுநோயினால் ஏற்படும் சாவிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளனர். இது தடுப்பு நடவடிக்கைகளினால் மட்டுமே அன்று. அண்மைக் காலத்தில் சோவியத்து நாட்டில் பேரளவு மருத்துவ ஆய்வின் கரணியமாக 1962-ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டால் இன்று முதிர்ச்சியடைந்த புற்றுநோயைக் கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்து விட்டது.

புற்றுநோய் வளர்ச்சியைத் தடுப்பது இயல்வதே என்று கூறினோம். புற்றுநோயை ஊக்குவிக்கும் சில பொருள்களுடன் நமது தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுவது இதற்குப் பெருமளவு உதவும். நூற்றுக்கணக்கான வகைப்பட்ட பிசின்கள் எண்ணெய்ப் பொருள்கள் ஆகியவை ஆராயப்பட்டன. எவையெல்லாம் புற்று நோயை ஊக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டதோ அவற்றின் விளைவு அறவே தடை செய்யப்பட்டது.

நாம் உள்ளிழுக்கும் காற்றிலுள்ள நீர்க்கரியக நச்சு (Benz-pyrene) என்ற நச்சு மிகக் கேடானது; காற்றிலுள்ள அந்த நச்சின் அளவு நாம் பயன்படுத்தும் இயங்கிகளின் இயந்திரங்களைப் பொறுத்ததாகும். தெருக்களின் சந்திப்புகளிலும், போக்குவரத்து விளக்குகள் கொண்ட சந்திப்புகளிலும் இவற்றின் அடர்த்தி மிகுந் துள்ளதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இதை மனதில் கொண்டு புதுமையான நகரங்கள் உருவாக்கப்படுவது தேவை. மாசுகோவிலும் பிற சோவியத்து நகரங்களில் இப்போது எல்லா சந்திப்புகளிலும் நடையாட்களுக்கென பாதாள கடக்கும் அமைப்புகள் கட்டப்பட்டு

வருகின்றன. உந்து வண்டிகளின் இயந்திரங்களில் முழுமையான எரிதலை உறுதிப்படுத்தும் அழுத்தக் கட்டுப்பாட்டு அமைப்புகள் பொருத்தப்பட்டால் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் நீர்க்கரியக நச்சின் அளவு வெகுவாகக் குறைந்து விடும்.

பிற நடவடிக்கைகள்: வளிமண்டலத்தை நச்சுப்படுத்தும் பிற மூலப்பொருள்களையும் அகற்ற சோவியத்து அரசு முயன்று வருகிறது. எடுத்துக்காட்டாகப் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட குடியிருப்புகளில் அவற்றை வெப்பப் படுத்துவதற்காகச் சிறுசிறு கொதிகலஅறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவையனைத்தையும் தற்போது அகற்றி ஆற்றல் வாய்ந்த நடுநிலை வெப்ப நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரும, நீர்ம எரிபொருளுக்குப் பகரமாக எரிவளியைப் பயன்படுத்தினால் உண்டாகும் புகையோ கரியோ தவிர்க்கப்படலாம். ஆகவே தெருக்களையமைப்பதற்காகக் கரிநெய் (Tar)யைப் பயன்படுத்துவது அறவே தடை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பகரமாக நிலக்கீல் (Bitumen) என்னும் பொருள் பயன் படுத்தப்படுகிறது. எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் அவை வெளிவிடும் புகையிலுள்ள நச்சுத் துகள்களை அகற்றுவதற்கான சிறப்புக் கருவிகளைப் பொருத்துவது சட்ட முறையாகச் செயல் படுத்தப்படுகிறது.

புற்றுநோய் ஊக்கும் பொருள்களை மாந்தனிடமிருந்து அகற்று வதற்கென அரசு பெரும் தொகைகளைச் செலவிட்டு வருகிறது. என்றாலும் சில பொழுதுகளில் மக்களே அவற்றை முறியடித்து விடு கின்றனர். எடுத்துக்காட்டாக வெண்சுருட்டுப் புகையில் உள்ள நீர்க் கரியக நச்சை இலக்கக்கணக்கான மக்கள் விருப்பத்தின் அடிப்படை யில் உள்ளிழுத்துக் கொண்டுள்ளனர். அதனால்தான் நுரையீரல் புற்றுநோயாளிகளில் பலர் புகைபிடிப்பவர்களாகவிருக்கிறார்கள்.

இது குறித்துச் சில புள்ளி விளக்கங்கள்: நாளொன்றுக்குப் பத்து வெண்சுருட்டுகள் மேனி இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் புகைக்கும் ஒருவருக்கு புகைபிடிக்காமல் இருப்பவரை விட புற்று நோய் வரும் வாய்ப்பு 11 மடங்கு அதிகம்; நாளொன்றுக்கு 20-30 வெண்சுருட்டுகள் பிடிப்பவர்களுக்கு இந்த ஏதம் 22 மடங்கும், 40 வெண்சுருட்டுகளுக்கு மேல் பிடிபவர்களுக்கு 52 மடங்கும் அதிகமா கிறது.

உடல் உழைப்பற்ற நிலை மாந்த உடலிலும் உறுப்புகளிலும் கழிவுப் பொருள் தேங்குவதற்கு வழி செய்கிறது. அதிக உணவும் குறைந்த உடல் உழைப்பும் உள்ளவர்களிடையே புற்றுநோய் இறப்பு விழுக்காடு பிறரைக் காட்டிலும் இரு மடங்கும் அதிகமாகும்.

இனி, முகாமையாகப் புற்றுநோய் ஏற்படுவதைத் தடை செய்யும் நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமானால், நல்ல பழக்கங்களும் அறிவார்ந்த உணவுப்பழக்கமும், தீய பழக்கங்களை அகற்றுவதும், நல்ல உடற்பயிற்சியும் தேவையாகும். o

சில புதிய செய்திகளும் பார்வைகளும்

—பர். க. ப. அறவாணன். க.மு.

1. குமரிக்கண்டம்: இற்றைக் குமரி முனைக்குத் தெற்கே, குமரி நாடு, குமரி ஆறு, குமரிக்கோடு ஆகியன இருந்தன. அவை பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்ட கடல்கோளால் அல்லது கடல் கோள்களால் அழிந்தன. இச்செய்திகளைப் பண்டைத் தமிழ் இலக்கியங் களும், உரைகளும் எடுத்துரைக்கின்றன. இச்சான்றுகள் தமிழில் மட்டுமே இருந்தமையால், இவை கற்பனை எனச் சிலரால் புறக் கணிக்கப்பட்டன. கடல்கோள் பற்றித் தமிழிலக்கியங்கள் மட்டு மின்றி வேறு சான்றுகளும் சிலரால் காட்டப்பட்டன. அவையும் புறக்கணிக்கப்பட்டன. இதோ இன்னும் சில புதுச்சான்றுகள்.

(அ) வங்கக் கடலுள் கடல்கோளுக்குப் பிறகு எஞ்சிய தீவு களாக, அந்தமான், நிகோபார், பசிபிக் தீவுகள் முதலாயின கருதப் படுகின்றன. அந்தமான் தீவுகளுள் ஒன்பது வகைப் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் திராவிடரைப் போன்று கறுப்பு நிறமும், கறுப்பு முடியும் உடையவர்கள். ஏனைய வட இந்திய மக்களைப் போன்ற நிறத்தினரும் இயல்பினரும் அல்லர். பர்மா, வங்காள தேசம், இந்திய வங்க மாநிலம் என்பவற்றிற்கு அருகிருந்தும், அம்மாநில மக்களோடு இணைப்புகள் இருந்தும் இவர்கள் கறுப்பராக இருப்பது வியப்பு.

இவர்கள் பெற்றோரிடமும் மற்றோரிடமும் காட்டும் மதிப்பு முறைகள், தமிழர், தெலுங்கர் மதிப்பு முறைகளோடு ஒத்துள்ளன.[1] இவர்கள் பேசும் மொழிகள் திராவிட மொழிகளைப் போல ஒட்டு நிலை மொழிகள். திராவிட மொழிகள், சில கூறுகளில் சித்திய மொழிகளை ஒத்திருப்பது போல, இவர்தம் மொழிகளும் சித்திய மொழிகளுடனும், ஆத்திரேலிய மொழிகளுடனும் ஒத்துள்ளன. திராவிடருக்கும் ஆப்பிரிக்கருக்கும் ஒற்றுமை இருப்பது போலவே, அந்தமான் பழங் குடியினருக்கும், ஆப்பிரிக்கருக்கும் இடையே நிறைய ஒற்றுமை இயல்புகள் உள்ளன.

இம்மக்களிடம் கடல்கோளைப் பற்றிய நாட்டுப்புறக் கதைகள், நம்பிக்கைகள் வழங்குகின்றன. இவர்தம் கடவுளின் பெயர் 'புலூக' (Pulauga). கடல்கோளிற்கு முன்பு 'புலூக'வின் இடம், வேறிடத்தில் (Saddle Peak) இருந்தது என்றும், பின்பு கடல்கோள் அழிவால், தங்குமிடம் மாற்றப்பட்டது என்றும் இம்மக்கள் நம்புகின்றனர்.[2]

---

1. Sir John Lubbock. 'On the Origin of Civilization', 4th edition. p. 164.

2. Edward Horace Man. The Aboriginal Inhabitants of the Andaman islands, Reprinted 1975. p. 99-101.

(ஆ) ஆப்பிரிக்காவில் கடல்கோள் பற்றிய கதைகள் வழங்குகின்றன. கடலைப் பெண் தெய்வமாகவும் நிலத்தை ஆண் தெய்வமாகவும் ஆப்பிரிக்கர் உருவகிக்கின்றனர். இத்தெய்வங்களிடையே ஓயாத போர்கள் நிகழ்ந்தன என்றும், இப்போர்களால், நிலப்பகுதிகளைக் கடலன்னை விழுங்கிவிட்டாள் என்றும் கதைகள் வழங்குகின்றன. தமிழக மீனவர், கடலைப் பெண் தெய்வமாக நினைப்பதும், கேரள முக்குவர், 'கடலம்மா' என்று வணங்குவதும் எண்ணத்தக்கன.

(இ) ஆந்திர நாட்டில், தெலுங்கரிடையே, கடல்கோள் பற்றிய கதைகள் வழங்குவதாக அண்மையில் கண்டறியப் பட்டுள்ளன.

(ஈ) ஆத்திரேலியாவிற்கு வடக்கே, நியூகினித்தீவுகளை ஒட்டி, இந்தோனேசியாவில் உள்ள ஒரு தீவின் பெயர் **மதுரை** என வழங்குகிறது.

(2) ஆப்பிரிக்காவை ஒட்டித் தென்கிழக்கே உள்ள மடகாசுகருக்கு ஒரு பெயர், 'கொமர்' என்பதாகும். மடகாசுகருக்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் இடையே உள்ள தீவுகள், இன்னும் 'கொமர்' என்று குறிக்கப்படுகின்றன. அங்குக் 'கொமர்' என்ற தனிநாடே உள்ளது. இப்பெயர்கள் குமரி > குமர் என்பவற்றின் திரிபு.

(ஊ) அழிந்த குமரிக் கண்டத்தைச் சிலர் கோண்ட்வனம் (**Gondwana**) என்பர். கோண்டு (**Gonds**) என்போர், திராவிடப் பழங்குடியினருள் ஒருவராவர். கோண்டி என்ற திராவிட மொழி பேசுநர். ஒரியா அதனை ஒட்டிய மாநிலங்களில், மறக்கப்பட்ட பல திராவிட இயல்புகளை இன்றும் காப்பாற்றிக் கொண்டு வாழுகின்றனர். இவர்தம் பழைய மாநிலம், அழிந்த குமரிக்கண்டம் என்பதையே 'கோண்டு வனம்' என்ற பெயர் காட்டுகிறது. கோண்டுகள், ஒரு காலத்தில் முடிமன்னராக நடு இந்தியா முழுதையும் ஆண்டனர். பின்னர், பகைவரால் ஒடுக்கப்பட்டு விரட்டப் பட்டனர். காடுகளில் மறைந்து, தம் பண்டைப் பெருமைகளைக் கதைகளாகப் பேசி வாழுமாறு செய்யப்பட்டனர். இதிலிருந்து ஒன்றை அறிந்து கொள்ளுதல் வேண்டும். பழங்குடி மக்கள் **அனைவரையும்** நாகரிகக் குறைவுடையராகவும், வரலாறு இல்லாதவராகவும் கருதுதல் பெரும் பிழை. கழக இலக்கியங்களில் பலபடப் பெருமையுறப் பேசப்படும், 'காவல் மரம்' காக்கும் பழக்கத்தைப் பிற்கால, சோழ, பாண்டிய, சேர மன்னர்கள் விட்டுவிட்ட நிலையில், இன்றும் அப்பழக்கத்தையும், பிற புறப்போர் முறைகளையும் உடையராகக் 'கோண்டு' மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

(எ) சுமேரியர் என்போர், மேற்கு ஆசியாவில்-டைக்கிரிசு ஆற்றங்கரையில் வாழ்ந்த கி.மு. 5000இலேயே மிகப் பண்பாடு அடைந்த மக்கள். இவர்களுக்கும், திராவிடருக்கும் இடையே பல

ஒற்றுமைகள் உள்ளன.[3] அவற்றுள் குறிப்பாக ஒன்று, கடல் கோளைப் பற்றிய வரலாறு சுமேரியர்தம் பண்டை மறைகளில் இடம் பெற்றுள்ளது.

'கடவுள் மாந்த இனத்தை முற்றுமாக அழிக்க மழையை ஏவினார். ஆறு பகலும், ஆறு இரவும் மழை 'கொட்டோ கொட்டு' என்று கொட்டியது. உலகம் நீரில் மூழ்கியது. உதா-நயிசிதிம் (**Uta-Napishtim**) என்பார், முன்பே ஒரு பெரிய கப்பலைக்கட்டி, அதன்வழி தன் குடும்பம், ஆடுமாடுகள், பறவைகள் பிற பொருள்கள் இவற்றுடன் தப்பி, நிசிர் என்ற மலையில் குடியமர்ந்தார்'.

2. **சிவபெருமான்:** சிவனின் தோற்றத்தை ஆராய்ந்த மாந்த இயலார், அவனைப் பழங்குடி மக்களின் கடவுள் (**Tribal God**) என்பர். சிவனின் தோற்றங்களுள் ஒன்று, தலைகளை மாலையாக்கி அணிந்திருப்பது. சிவமதங்களுள் ஒரு பிரிவினதான 'கபாலி' மதத்தினர், தலைகளை மாலையாக அணியும் இயல்பினர். இன்று இப்பழக்கம் முற்றும் மறந்துவிட்டது போலத்தோன்றினும், பழங்குடி மக்களிடையே இப்பழக்கத்தை நினைவுகூர முடிகிறது. அந்தமான், பழங்குடியினர், இறந்த உறவினர் தம் கபாலத்தையும், ஏனைய எலும்புகளையும் மாலையாக்கி அணிந்து கொள்ளும் பழக்கத்தினராக உள்ளனர்.

3. **முருகன்:** ஆரிய-திராவிடப் போராட்டம் அண்மையில் தொடங்கினது அன்று. சிந்துவெளி நாகரிகத்தை அழித்ததினின்று தொடங்கியது. காலம் காலமாக நடந்து வருவது. பன்னூறு ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இப்போர்களில், தொடர்ந்து வெற்றி பெற்று வருவோர் ஆரியரும், அவர் சார்பினருமே. திராவிடர் வஞ்சகமாகவும், வெளிப்படையாகவும், மத வழியாகவும், களவழி யாகவும் ஏமாற்றப்பட்டும், தோற்கடிக்கப்பட்டும் வருகின்றனர். இதன் தழும்புகளை திராவிட இலக்கியங்களில் இலைமறை காயாகக் காணலாம். முருகன் என்ற தமிழ்த் திராவிடக் கடவுள் வரலாறு இவற்றுள் ஒன்று, முருகன், 'சுப்பிரமணியன்' ஆனது குறிப்பிடத் தக்கது. முருகன், தமிழ்க்கடவுள்; தமிழர் கடவுள். அவன் 'பிராமணர்க்கு அன்பானவன்' என்ற பொருளில் 'சுப்-பிரமண்-யன்' என்று குறிக்கப்பட்டான். எப்படி? முருகன், சிவனின் 'சேய்' அல்லன். கழக இலக்கியங்களில் முருகன், கொற்றவை புதல்வனாகக் குறிக்கப்பட்டானே அன்றி, சிவனின் சேயாகக் குறிக்கப்படவில்லை (காலத்தாற் பிற்பட்ட திருமுருகாற்றுப்படை நீங்கலாக).

தொல்காப்பியத்தில் 'சேயோன்' என்ற குறிக்கப்பட்டதும் 'சிவன்மகன்' என்ற பொருளில் அன்று. சிவனைப் பற்றியே தொல்

---

3. K. P. Aravaanan. A Few notes on the Dravido-Africans and the Sumerians. International Islamic Tamil Conference. Ceylon. May 18-21, 1979.

காப்பியத்தில் குறிப்பில்லாத போது, அவன் குடும்பத்தைப் பற்றிய் குறிப்பிற்கு இடமேது? ‘சேயோன்’ என்றால், மலையில்—உயரமான இடத்தில்—சேய்மையில் இருப்போன் என்பதே பொருள்.

வடஇந்திய முறைப்படி, முருகன் மணமானவன் அல்லன். அவனுக்கு வள்ளி என்ற தமிழ்க்குறத்தி மனைவி. அவளுடன், தெய்வானை என்ற ஆரியப் பெண் இரண்டாம் மனைவி ஆனது எவ்வாறு?

தெய்வானையின் தந்தை இந்திரன். இந்திரனே, சிந்துவெளி திராவிடக் கோட்டைகளைத் தகர்த்து எறிந்தவன்? அதனால் கோட்டைகளைத் தகர்த்தோன் (புரந்தரன்) என்று வேதங்களில் பரக்கப் புகழப்பட்டான். திராவிட எதிரியான இந்திரன், பழநியை ஆண்டவனான திராவிட முருகனுக்கு ஏன் பெண் கொடுத்தான்?

இந்திரனுக்கும், முருகனுக்கும் பல போர்கள் நிகழ்ந்தன. இப் போர்களில், இந்திரன் தொடர்ந்து தோற்றான். தேவ தலைமையை விட்டு, இந்திரன் நீக்கப்பட்டான். ‘தேவ சேனாபதி’ ஆயினான். கந்த புராணத்தில், இடம் பெற்றிருக்கும் செய்தி இது.

இதன் புறப் பொருள் என்ன? ஆரிய இந்திரனுக்கும், திராவிட முருகனுக்கும் போர்கள் நிகழ்ந்தன. இப்போர்களில் ஆரிய இந்திரன் தோற்றான். திராவிட முருகன் வென்றான். இந்திரன், தேவ தலைமையை இழந்தான். ஆனால் தன் மகள் தெய்வானையை முருகனுக்குத் தரும் முகமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டான் இந்திரன். ஆரியர், திராவிடரை, களவழியாக, மதவழியாக மட்டு மின்றித் தம் ‘மகள்’ வழியாகவும் சரிசெய்து கொண்டனர் என்பதற்கு ‘முருகன்-தெய்வயானை’ மணம் மறைமுகமாகச் சான்றளிக்கிறது.

4. **நாடகம்:** ‘நாடகம்’ என்ற சொல்லைத் தொல்காப்பியமும் இன்ன பிற, கழக இலக்கியங்களும் ஆளுகின்றன. இச்சொல் ‘நடி’ என்ற வடசொல்லடியாகப் பிறந்த சொல் என்றும், நாடகமே வட புலத்து வரவு என்று எழுதுவோரும் எடுத்துரைப்போரும் உளர். இக் கருத்து முற்றும் வழுவுடையது.

நாடகம் என்ற சொல் ஆடு + > அகம் > ஆடகம் + ந் > நாடகம் என்றாகியிருத்தல் வேண்டும்.

ஆன்றோர்	> (ச்) >	சான்றோர்
உமக்கு	> (ந்) >	நுமக்கு
உமது	> (ந்) >	நுமது
உம்	> (ந்) >	நும்
ஈர்(அம்)	> (ந்) >	நீர்
ஈ[4]	> (ந்) >	நீ

4. கட்பா, கோண்டி, குயீ, ஆகிய திராவிட மொழிகளில் ஈகாரமே, முன்னிலை ஒருமைச் சுட்டுப் பெயரின் முதல் எழுத்தாக உள்ளது. T. Burrow and M. B. Emeneau. DED. 3051.

என்ன பயனோ இவை?

—கொண்டல் வண்ணன். (பொறி.இ.)

நம் தமிழ்நாட்டுப் பாட நூல்களில், கழகம் அமைத்துத் தமிழ் வளர்த்த வரலாற்றைப் பற்றி எழுதியிருக்கிறார்களோ இல்லையோ, ஆரியரின் நான்மறைகளைப் பற்றியும் புராண இதிகாசங்களைப் பற்றியும் தவறாமல் எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு பயனும் அற்ற-தமது வயிற்றுப் பிழைப்புக்குக் கருவியாக இருந்து உதவுவதே அன்றி வேறொரு பயனும் அற்ற—அந்த நான் மறை முதலானவை பற்றி மிகமிக உயர்வாகப் பார்ப்பனர்கள் எடுத்துச் சொல்லி, அன்றும் இன்றும் தமிழ் மக்களைப் பெரு மயக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறார்கள்.

இதுவரை, தமிழ் மண்ணில் தோன்றிய எந்தச் சமயப் பெரியாரும், மேற்பட்ட மெய்யறிவாளரும் ஆரியப் பார்ப்பனரின் சூழ்ச்சி குறித்துக் குறிப்பாக வேனும் ஏதும் கூறாமல் அவர்க்கு அடிமை பூண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன்பே, ஆரியரிகளின் வலக்காரத்தைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்தவர் **வள்ளற் பெருமானே** ஆவார். இருந்தும், அவர்தம் சொற்களையும், பாட்டுகளையும் இருட்டடிப்பு செய்து, தமது வலிய சூழ்ச்சித்திறனால் இன்று வரையிலும் தமிழ்த்தேனில் ஆரிய நஞ்சைக் கலந்துகொண்டே இருக்கின்றனர், பார்ப்பனர்களும், அவர்க்குத் துணைபோகும் ஆரிய அடிவருடிகளும்.

அந்த நான்மறை முதலான நூல்களில் உள்ளவை மெய்யிறைக் கொள்கையும் அன்று; அவற்றை இயற்றியவர்கள் மெய்யறிவு நிரம்பியவரும் அல்லர் என்பதைப் பின்வரும் **வள்ளலார்** கூற்றால் நன்குணரலாம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

நாடகத்தைக் கூத்து என்பதும், ஆட்டம் என்பதும் பண்டைய வழக்குகள். இன்றும் பொதுமக்கள் நாடகத்தையும், நாடகப் புது வடிவினதான திரைப்படத்தையும் 'ஆ ட் ட ம்' என்று வழங்குகின்றனர். முதல் ஆட்டம், இரண்டாம் ஆட்டம் என்று அவர் பேசுகின்றனர். 'என்ன நாடகமா நடிக்கிறாய்' என்று கூறாமல், சிற்றூர் மக்கள், 'என்ன நாடகமா **ஆடுகிறாய்?'** என்று பேசுவதே இன்றும் கேட்கலாம். அன்றியும் உலகெங்கும், நாடகம் ஆட்டத்தினின்றும், குறிப்பாக விளையாட்டினின்றும் முகிழ்த்தது என்பதை, நாடகத்தை **'Play'** என்ற சொல்லால் ஆங்கிலேயரும் அவரொத்த வேறு சில ஐரோப்பியரும் குறிப்பதால் உணரலாம். எனவே ஆடு + அகம் > ஆட்டகம் > ஆடகம் > (ந்) நாடகம் என்றாயினமையை உணர்தல் வேண்டும். இங்கே, அகம் என்பதை ஆடுதலையுடைய இடம் என்றோ அல்லது ஒலி நயத்திற்காக வந்த சாரியை என்றோ கொள்ளுதல் வேண்டும். ஒப்பு நோக்குக. ஏர் + அகம் > ஏரகம் — தற்போது திருவேரகம் என்ற பெயரிய ஊர். 0

"சமய மத சாத்திரங்களில் அனேக இடங்களில் பிழைகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்து இருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டு இருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது."

மேலும் விளக்கமாகச் சொல்கிறார்:—

"நாம் முன் பார்த்தும் கேட்டும் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய [1]கலைகள் எதனிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது, [2]குழூஉக்குறியன்றித், தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னது கொஞ்சமேனும் புறங்கவிய (வெளிப்படையாக)ச் சொல்லாமல் மண்ணைப்போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனும் தெரிவிக்காமல் பிண்டலட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள்.

யாதெனில், கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம் முதலியவையும் ஒரு மனிதனுக்கு அமைப்பது போல அமைத்து, உண்மையாகவே இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். தெய்வத்துக்குக் கைகால் முதலியன இருக்குமா என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள [3]பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை அதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் [4]பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை."

---

1. "கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
   கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக"
   என்று தூற்றியதும் இக் கலைகளையே.
2. ஆரிய மறைகளில் இருப்பதெல்லாம் ஆரியரின் வயிற்றுப் பிழைப்புக்கு அடிகோலும் வஞ்சகமான குழூஉக் குறி மொழிகளே என்று வெளிப்படையாக எடுத்துரைக்கிறார்.
3. காஞ்சிப் பெரியவர்களையே இவ்வாறு கூறுகிறார் எனக் கருத இடமுள்ளது. உண்மையில் பெரியவர்களாக இன்றித் தாமே வலிய அவ்வாறு பெயரிட்டுக் கொண்டிருந்தவர்கள் அவர்களே அல்லவா?
4. அந்த வல்லவன் மறைத்ததைக் கண்டவர்-அவன் பூட்டிய அந்தப் பூட்டை உடைத்தெறிந்து உண்மையை உலகுக்கு உணர்த்தியவர் வள்ளலாரே. ஆனால் அவர் சொற்களைத் எவ்வளவு இருட்டடிப்பு செய்துவிட்டனர்.

நான்மறை முதலியன எல்லாம் நாகரிகம் முற்றாத மாந்தரின் பொருளற்ற மொழிகள் என்னும் பொருள்பட.

"சதுமறை ஆகம சாத்திர மெல்லாம்
சந்தைப் படிப்பு நம் சொந்தப் படிப்போ,"

—என இகழ்ந்துரைக்கிறார். இனிமேல், சமய, மத வேறுபாடுகளும், சாதி வேறுப்பாடுகளும் ஒழிந்தன; பொருளற்ற நான்மறைக் கூச்சல்களும் அடங்கின என்று பாடுகின்றார்.

"மதித்த சமய வழக்கெலாம் மாய்ந்தது
வருணாச் சிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாச்சாரக் கொதிப்பெலாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது
குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று..."

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"; என முழங்கிய திருக்குறள் போலல்லாது, ஆரிய இனத்தின் "உழைப்பின்றி உயர் வாழ்வு"க்காக வஞ்சகமாக எழுதப்பட்டவையே நால் வேதம் முதலியன. அவற்றின் சூதெல்லாம் உள்ளது உள்ளப்படியே எனக்கு உணர்த்தினை. இனி, அவ்விழி நூல்களைப் பயின்று காலத்தை எள்ளளவும் வீணாக்க விரும்புகிலேன் என்று இறைவனை நோக்கிச் சொல்லுகிறார்.

"வெதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்[5]
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உனஅனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த் தினையே.
ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவும் எண்ணமிலேன் .."

பார்ப்பனர்களின் வலக் காரத்திற்கும், சூழ்ச்சிக்கும் ஆளாகி, மதிமயங்கி, அரும்பெரும் தமிழ் நூல்களின் பெருமையும், அருமையும் உணராது, ஆரியர் தம் நூல்களின் சிறுமையும், பொய்ம்மையும் தெளியாது, அவற்றைப் போற்றியுரைக்கும் தமிழ்ப் பகைவர்களை நோக்கி வினவுகின்றார் வள்ளலார்:—

"வேதா கமங்கள்என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்ன அலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை?" o

5. பவுராணங்கள்—புராணங்கள்.

செய்திகள்

1. சிதம்பரம்—குணசுந்தரி வாழ்க:

கீரமங்கலம் தென்மொழியன்பர் **சிதம்பரத்**திற்கும் **குண சுந்தரி**க்கும், கடந்த 2-6-79 அன்று சென்னையில், பொறுப் பாசிரியர், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில் கலப்புத் திருமணம் நடந்து, அன்றே அது சென்னை, நந்தனம் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் பெற்றது. மணமக்கள் தங்கள் திருமண நன்கொடையாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா இருபத்தைந்து அன்பளிப்புச் செய்தனர். மணமக்கள் நீடுழி வாழ்ந்து நலமும் வளமும் பெற, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்து கிறது.

2. புலவர் சிவசண்முகம்—கலாவதியர் திருமணமும் 'நூறுசிரியம்' வெளியீட்டு விழாவும்:

கடந்த விடை 24 (7-6-79) காலை 8-மணியளவில் வண்ணங் குண்டு, பெருநிலக்கிழார் திரு. அ. மு. இராமமூர்த்தி அவர்களின் மகனும், நெடுநாளைய தென்மொழியன்பருமாகிய செல்வன், புலவர். **சிவசண்முகம்** (இல.இ) அவர்களுக்கும், சக்கரைக் கோட்டை பெருநிலக்கிழார் திரு. மு. சிவப்பிரகாசம் அவர்களின் மகள் செல்வி **கலாவதி**க்கும், திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகப்பெருமான் திருமன்றில் திருமணம் சிறப்புற நடந்தது. திருமண விழாச் சிறப்பாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் **நூறுசிரியம்** (முதல் தொகுதி) நூல் வெளியீட்டு விழா, அன்று காலை 10-மணியளவில், அங்கயற்கண்ணி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குப் பேரா. **மு. தமிழ்க்குடிமகன்** க.மு. தலைமை தாங்கினர். தொடக்கத்தில் மணமகனின் தந்தையார் திரு. **அ. மு. இராமமூர்த்தி** வரவேற்புரையாற்றினர். கலைமாமணி பா. **உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்**. க.மு;இல.மு. (இயக்குநர், தமிழ்நாடு அரசு தமிழ்ப் பண்பாட்டு நடுவம்) அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினர். அவர் உரையில், கழகக் காலத் திற்குப் பின், தமிழில் இத்துணையளவு இலக்கியச் சிறப்பும் தமிழ் நலமும் மிக்க நூல் ஒன்று வெளிவருவது மிகவும் மகிழ்ச்சி தருவது என்றும், **நூறுசிரியம்** என்னும் இந்நூலின் ஆழமும் அகலமும் தமிழ்மொழிக்கே பெருமை தருவது என்றும், இதுபோல் ஒரு நூலைப் படைத்த ஆசிரியர் மிகவும் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவர் என்றும், அவரது நூற்பயிற்சியும், இலக்கியப் புலமையும் மிகவும் உயர்வும் சிறப்பும் வாய்ந்தன என்றும், இவர் இந்நூலில் கையாண் டுள்ள சொல்லாட்சியும், உவமைகளும் இக்கால் உள்ள தமிழ், ஆங்கில இலக்கியங்களில் எங்கும் காணப்பெறுத உயர்ச்சி சான்றன என்றும், அவரின் முழுப்புலமையையும் தமிழும் தமிழரும் பயன்படுத்திக்

கொள்ளவேண்டும் என்றும், பல இலக்கிய மேற்கோள்களுடன் ஒப்பீடு செய்து பலபடப் பாராட்டி உரைத்தார்கள். தலைவர் ஆசிரியரைப் பாராட்டிப் பேசுகையில், தாம் நூலாசிரியர் அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டவரென்றும், அக்காலும் ஆசிரியரின் **மகபுகுவஞ்சி** என்னும் ஓர் அரிய இலக்கியத்தின் **முதற்பத்து** வெளியிடப் பெற்றதென்றும், நூறாசிரியத்துள் தம் வாழ்க்கை நிகழ்ச்சியொன்றையும் ஆசிரியரவர்கள் ஒரு பாடலாகத் தந்துள்ளார்கள் என்றும், ஈடு இணையற்ற புலமை மிக்க இவ்வரிய இலக்கியத்தை அனைவரும் கற்றல் வேண்டுமென்றும், கூறியமைந்தார்கள். அடுத்து, சித்தோடு பாவலர் திரு. **குமர நடவரச ஈவப்பனார்** அவர்களும் நூறாசிரியம் பாட்டு ஒன்றிரண்டைக்கூறி நூற்சிறப்பை மிகவும் வியந்து போற்றினார்கள். இறுதியில் ஆசிரியர் **பெருஞ்சித்திரனார்** அவர்கள், தாம் நூல் எழுதியது கூட அத்துணைப் பெருமைமிக்கது அன்று என்றும், அதனைத் தம் திருமணச் சிறப்பாக வெளியீடு செய்தல் வேண்டும் என்று முயற்சி செய்த புலவர். திரு. **சிவசண்முகமும்**, அவர் விழைவிற்கிசைந்து பொருளீந்து, இவ்வரிய நூலை வெளியிட முன்வந்த அவர் தந்தையார் திரு. **அ. மு. இராமமூர்த்தி** அவர்களுமே பெரும் பாராட்டுக்குரியவர்கள் என்றும், இக்காலத்தில் உண்மையான தமிழ் இலக்கியத்தினைப் பாராட்டுதற்குரிய திறவோரும், நடுநிலையாளரும் அருகிவருகின்றார்கள் என்றும் கூறி, திருமண மக்களை வாழ்த்தும் முகத்தான் பல வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டி அரியதோர் இலக்கியவுரை செய்து வந்திருந்தவர்களை வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்தினார்கள். பின்னர் விழாவிற்கு வந்திருந்தவர்கள் அனைவர்க்கும் நூறாசிரியப் படிகள் வழங்கப்பெற்றன. முதற்படியினை திரு. **சே. அபிசேக பாண்டியன்** பெற்றுக் கொண்டார். இறுதியில் திரு. **பழ. பழநிவேல்** க.மு. அவர்கள் நன்றியுரையாற்றிட, விழா இனிது நிறைவுற்றது. செவிவிருந்திற்குப் பின்னர் அவிவிருந்து அனைவர்க்கும் படைக்கப் பெற்றது.

புலவர் **சிவசண்முகம்** செல்வி **கலாவதி** அவர்களுக்குப் **பாவலரேறு** அவர்கள் வழங்கிய திருமண வாழ்த்து:

வெப்புமனம் வினைக்கோணல் விரகுநிறைந் தெங்கும்
வீணர்களே பெருகிவரும் துயர்மிகுமிந் நாளில்
எப்பொழுதும் தமிழ்நினைக்கும் இனியதிரு வுள்ளம்
எந்தமிழர் நலங்கருதும் தொண்டுணர்வு கொண்ட
ஒப்பரிய சிவசண் கப்புலவர் என்பார்
ஒண்டொடியாம் கலாவதியை மணக்கின்ற போழ்தும்
செப்பரிய தமிழ்த்தொண்டாய் நூறாசி ரியமென்
செந்தமிழ்நூல் வெளியிட்டுப் பெரும்பெருமை கொண்டார்!

அன்னவர்தம் உளம்வாழ்க! தமிழ்நினைவு வாழ்க!
ஆற்றுகின்ற இல்லறமும் நலம்நிறைந்து வாழ்க!

பொன்னலமும் புகழ்நலமும் ஒருங்குவந்து சேர்ந்து
பொதுநலமும் நனிவாழ்க! பொலிகஅவர் தொண்டு!
சொன்னலமும் பொருள்நலமும் புலமைநலமும் பெற்றுச்
சோர்வின்றி ஒளிமல்கும் அறிவுநலம் வாய்ந்து
பன்னலமும் அவர்பெறுக! பல்குகபே ரின்பம்!
பைந்தமிழ்போல் புலவரவர் தமிழ்க்குடும்பம் வாழி!

3. தைப்பிங்கில் தென்மொழித் தொண்டர் தமிழ்த் திருமணம்:

மலேசியா, பேராக் மாநிலம், தைப்பிங்கில், நிகழும் தி.பி. 2010 விடைத் திங்கள் 13-(27-5-79)ஆம் பக்கல் ஞாயிறு மாலை 5 மணி யளவில், நெடுநாளையத் தென்மொழி அன்பரும், தொண்டரும், பாவலருமாகிய திரு. **முத்துபாண்டியன்** அவர்களுக்கும், செல்வி **மகேசுவரி** என்ற **மலர்விழிக்கும்**, தமிழ்த் திருமணம் மிகச் சிறப்புற நடந்தேறியது.

இஃது ஒரு கலப்புத் திருமணமும் ஆகும். எனவே, மணமகன் பெற்றோர் சார்பில் இதற்குப் பெரிய எதிர்ப்பும் தடையும் இருந்தன. ஆனால் திரு. முத்துப் பாண்டியன் தீவிர புதுமை உணர்வும் பொதுமை நோக்கமும் கொள்கை வலிவும் தூய தனித்தமிழ்ப் பற்றும் கொண்ட வராகையால், இத்திருமணத்தை மிக உறுதியுடன் நின்று நிகழும்படி செய்தார். பெற்றோர் அரவணைப்பும் உற்றார் துணையும் தவிர்ந்ததுடன், அவர் வழித் தம் வாணிக நிலையினையும் இழந்தும் கூட, சிறிதும் மனம் நெகிழாமல் மீண்டும் தம் வாணிகத்தைத் தனித்து நிலைப் படுத்திக் கொள்கை பிறழாத குணக் குன்றாய்ச் செம்மாந்து நின்ற மணமகன் திரு. முத்துப்பாண்டியனின் கொள்கைப் பிடிப்பு மிகவும் பாராட்டத்தக்கதும் பின்பற்றத்தக்கதும் ஆகும்.

திருமணம் மலேசியாவில் உள்ள சான்றோர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பாவலர்கள், பொதுத் தொண்டர்கள், தமிழ்த் தலைவர்கள் ஆகியோர் துணையுடன் மிகவும் பெருமையுடனும் சிறப் புடனும் நடந்தேறியது.

பினாங்கு செந்தமிழ்க் கலை நிலைய நிறுவனரும் தலைவரும் ஆகிய தமிழ்த் திரு **இராமதாச அடிகள்** இத்திருமணத்தை முன்னின்று நடத்தினார். ஈப்போ, பாவாணர் தமிழ் மன்றத் தலைவர் திரு. **இரா. பெருமாள்** விழாவிற்குத் தலைமை தாங்கினார். பாவாணர் தமிழ் மன்ற அமைப்பாளரும், சீரிய தென்மொழித் தொண்டரும், கடந்த இருபது ஆண்டுகளாக மலேசியா முழுவதிலும் தென்மொழியைப் பரப்பி, நூற்றுக்கணக்கான தென்மொழித் தொண்டர்களை உருவாக் கியவரும் தூயத் தமிழ்ப் பாவலரும், பாவாணர் தமிழ் மன்ற ஆசிரியருமாகிய செந்தமிழ்க்குரிசில் **சா. சி. சுப்பையா** அவர்கள் மணவினை இயக்குநராக இருந்து திருமணத்தைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

மற்றும், தமிழ்த்திருவாளர்கள் முருகு சுப்பிரமணியனார் (கோலாலம்பூர்), கா. கலியபெருமாள், (ஈப்போ) வி. கே. சுப்பிரமணியனார் (பினாங்கு), இரா. சண்முகவேலு (தைப்பிங்), க. குமரன் (ஈப்போ), துவான் இசுமாயில் உசேன் (தைப்பிங்), முரு. சொ. நாச்சியப்பன் (ஈப்போ), முதுபெரும் பொதுநலவூழியர் மு. சு. மணியம் (ஈப்போ), பர். செகநாதன் (தைப்பிங்), மா. செ. முத்துமாறன், (ஈப்போ), முதலிய சான்றோரும் அறிஞரும் மணமக்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் உரை நல்கினர். தமிழகத்தினின்றும் பல்வேறு நாடுகளிலிருந்தும் மணமக்களை வாழ்த்திச் சான்றோர் பலர் நல்லுரைகள் பல விடுத்தனர்.

திருமண விழாவினை யொட்டித் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 500 (ஐநூறு) அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. மணமக்களை நீடூழி வாழ்க வென நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

முத்துப் பாண்டியன்—மலர்விழியர்க்குப் பாவலரேறு அவர்களின் வாழ்த்து!

எந்தமிழ்த்தாய் வீற்றிருக்கை ஏற்ற தமிழ்நெஞ்சம்
செந்தமிழ்ப்பா யாக்கின்ற சீர்வாயும்-வந்தவர்க்கே
ஈத்துவக்கும் பண்பும் எழில்**முத்துப் பாண்டியனைக்**
காத்துவக்கும் வாழ்வுக் கலன்!

நல்**முத்துப் பாண்டியனும்** நல்ல **மலர்விழி**யும்
இல்ஒத்த நல்லறத்தை ஏற்றார்-கல்லொத்த
வல்லுறுதி நெஞ்சங்கள் வாழ்கவென வாழ்த்தினார்
சொல்லுறுதிச் சான்றோர்கள் சூழ்ந்து

பாவல னும்**முத்துப் பாண்டியனும்** பாண்டியனை
ஆவலால் கைப்பிடித்த அல்லி **மலர்விழியும்**
மேவலுறும் இல்லறமும் மேம்பட்டு வாழ்ந்துயர்ந்து
காவலாய் நிற்கதமிழ் காத்து.

பிற செய்திகளும் நன் கொடைகளும்

1. நிலா வேங்கடவன்—சிலம்புச் செல்வியர் வாழ்க:

கடந்த 6-6-79 அன்று பழனியில் நடந்த நெடுநாளைய தென்மொழியன்பர் திரு. **நிலா வேங்கடவன்—சிலப்புச்செல்வியர்** திருமண விழா நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 25/- நன்கொடையாக வரப் பெற்றோம். மணமக்கள் சீருஞ் சிறப்புடனும் நீடூழி வாழ்ந்து பெருமை பெற, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. க. ஆகுன்றன்—உலகநயகியார் வாழ்க:

கடந்த ஆடவை கரு (27-6-79) அறிவன் காலை நெடுநாளைய தென்மொழியன்பரும், **கனிச்சாறு** வெளியீட்டாளரில் ஒருவருமாகிய

திரு. **க. ஆகுன்றன் (கோவிந்தசாமி)** அவர்கட்கும், செல்வி. **உலகநாயகி**க்கும், கோவை மா.வ. சூலூரில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 250/- (இருநூற்று ஐம்பது) நன் கொடையாக அளிக்கப் பெற்றது. மணமக்கள் இறையருளால் எல்லா நலன்களும் வளங் களும் வாய்க்கப் பெற்று இனிதே வாழ்ந்து, எந்தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் அரிய தொண்டாற்றிப் பெரும் புகழ் பெற, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

3. வடவார்க்காடு மாவட்டம் சோழலிங்கபுரம், **தென்மொழி கோ. நக்கீரன்** அவர்களின் துணைவி **இலக்குமி**க்குக் கடந்த 29-4-79 அன்று காலை இரண்டாம் மகவு **தாமரை** பிறந்ததன் நினைவாகத் தென்மொழிக்கு உரு: 15/- அன்பளிப்பாக வரப் பெற்றோம். குழந்தை தாமரை எல்லா நலமும் வளமும் பெற்று வாழ தென்மொழி வாழ்த்துகிறது.

4. கீரமங்கலம் தென்மொழியன்பர் **தமிழ்க்குமரன் - இந்திரா குமாரி** ஆகியோருக்கு 24-4-79 அன்று பிறந்த ஆண்குழந்தைக்குப் **பூங்குன்றன்** என்று பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 5/- நன்கொடையாக வரப் பெற்றது. பூங்குன்றன் பொலிவுடன் வலிவும் பெற்று வாழ தென்மொழி வாழ்த்துகிறது.

5. பொழில்வாய்ச்சி—கோட்டூர் தென்மொழியன்பர் திரு. கி. **பெருமாள்—பொன்னுத்தாய்** ஆகியோருக்குக் கடந்த 24-5-79 அன்று பிறந்த ஆண்குழந்தை நினைவாகத் தென்மொழிக்கு உரு: 5/- நன்கொடையாக வரப்பெற்றது. குழந்தை சிறப்புற்று வாழ தென் மொழி வாழ்த்துகிறது.

6. திரு. வ. வேம்பையன், அமைப்பாளர், கல்பாக்கம் கலை, அறிவியல் மன்றம், அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்காக உரு: 5/– நன்கொடையாக விடுத்துள்ளார். நன்றி.

7. திரு. வீ. பொன்னையா (படைத்துறை மறவர்) அவர்கள் தென்மொழிக்கு அன்பளிப்பாக உரு: 4/-விடுத்துள்ளார். நன்றி.

8. கோவை, சிங்காநல்லூர் அன்பர் திரு. மா. கதிரொளி தென் மொழிக்கு அன்பளிப்பாக விடுத்த உரு: 5/- நன்றியுடன் வரப் பெற்றோம்.

பிற நிகழ்ச்சிகள்.

1. பாவாணர் பயிற்றகம், கன்னிகோவில் (புதுவை) வேனிற்கால விடுமுறைப் பயிற்சி வகுப்புகள்:

வழக்கம்போல், புதுவை, கன்னிகோவில் பாவாணர் பயிற்றகம் நடத்தும், வேனிற்கால விடுமுறைப் பயிற்சி வகுப்புகள் இந்த ஆண்டும் 15-4-79 முதல் 1-5-79 வரை குறவள்ளிமேடு, அரசினர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்றன; மாணுக்கருக்கென இலவயத் தமிழ், ஆங்கில, இலக்கண, இலக்கிய வகுப்புகளை அறிஞர்கள் பலர்

நடத்தி. 5-ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மாணுக்கர்கள் உட்பட அனைவரும் பயனடையுமாறு செய்தனர். நிறைவு நாளில் பாட்டுத் திறன் ஆய்வரங்கமும், கருத்தரங்கமும், பட்டி மன்றமும் நடை பெற்றன; அறிஞர்கள், பேராசிரியர்கள் பலரும் பங்கெடுத்துக் கொண்டனர்; என்று பயிற்றக நிறுவனர் திரு. **கதிர் முத்தையன்** தெரிவிக்கின்றார்.

2. பாவேந்தர் விழா, வஞ்சி பாளையம் (கோவை);

கடந்த விடை 13 (27-5-79) மாலை 6-மணியளவில், (கோவை) வஞ்சி பாளையம் முத்தமிழ் இலக்கிய மன்றம், குறுக்கபாளையம் முத்தமிழ் இளைஞர் மன்றம் சார்பாக, **பாவேந்தர் பாரதிதாசனுர் விழா** சிறப்புற நடைபெற்றது. மருத்துவர் திரு. **சை. நசீம்பாட்சா** தலைமை தாங்கினார். திரு. செ. நடவரசு பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்துத் தொடக்கவுரையாற்றினார். அந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து திரு. தென்மொழி, **ந. முத்துக்குமரன்** அறி.இ; ப.இ. அவர்கள் தலைமையில் பாவேந்தர் பாடல்களில் விஞ்சி நிற்பது குமுகாய சீர்திருத்த உணர்வா, தமிழ் உணர்வா என்னுந்தலைப்பில் பட்டி மன்றம் நடந்தது. அறிஞர் பலரும் கலந்து கொண்டனர். முடிவில் தலைவர் 'தமிழ் உணர்வே' என்று தீர்ப்பளித்தார்.

3. புதுச்சேரி தமிழ்க் கழகத்தின் வேண்டுகோள்:

புதுச்சேரியில் இயங்கும் **தமிழ்க்கழகம்** கீழ்க்காணும் அறிக்கையை அரசுக்கும், பொது மக்களுக்கும் வழங்கியிருக்கிறது.

இந்த ஆண்டு 1979 ஆட்சி மொழி ஆண்டாக நாடெங்கிலும் கொண்டாடப் பெறுகிறது. சென்ற ஆண்டில் கூடிய அனைத்திந்திய ஆட்சி மொழி மாநாடு பின்வரும் திட்டங்களை வகுத்துள்ளது.

1. 1965-ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி மொழிச் செயற்பாட்டுத் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்பெறும் உத்தரவுகள் உடனடியாக மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும்.
2. ஆட்சிமொழிச் செயற்பாட்டுத் திட்ட வளர்ச்சியைக் கவனிக்கத் தலைமைச் செயலகத்தில் தனி அதிகாரி ஒருவர் பல்வேறு அலுவலகங்களையும் பார்வையிடுவார்.
3. ஆட்சி மொழிச் செயற்பாட்டுத் திட்டத்தின்படி தமிழ்க் கலைச் சொல் தொகுதிகளையும், தட்டெழுத்துப் பொறிகளையும் எல்லா அலுவலகங்களும் தருவித்துக் கொள்ளுதல் வேண்டும்.
4. தலைமை. அதிகாரிகள் தம் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களுக்குத் **தமிழிலேயே** குறிப்புகள், வரைவுகள், மடல்கள், உத்தரவுகள், தீர்ப்புகள் போன்றவற்றை எழுத அறிவுறுத்தல் வேண்டும். அவர்களுடைய ஆர்வத்தை இப்பணியில் ஊக்குவிக்கவும் வேண்டும்.
5. புதுவை அரசுக்குத் தேவையான கையேடுகள், படிவங்கள் முதலியவை தமிழிலேயே வெளியிடப் பெறுதல் வேண்டும்.

6. பெயர்ப் பலகைகள், அறிவிப்புப் பலகைகள், திறப்பு விழா அடிக்கல் நாட்டு விழாக் கற்கள் போன்றவையும் இனிமேல் தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக புதுவை அரசும் சுற்றறிக்கை (எண். பி. 6/44504/78-79/கல்வி; (19-1-79) விடுத்துள்ளது. அதன்படி எல்லா அரசு அலுவலகங்களும் அதிகாரிகளும் அனைத்து அலுவல்களுக்கும் தமிழையே பயன்படுத்துமாறும், அரசு ஊழியர்களும் தங்கள் பெயர்களைத் **தூய தமிழில்** மாற்றிக் கொள்ளுமாறும் தமிழ்க்கழகம் வேண்டுவதுடன், பெயர் மாற்றத்திற்கான எல்லா உதவிகளையும் தமிழ்க்கழகம் செய்ய அணியமாக உள்ளதென்றும் அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கைச் செய்தியை யொட்டித் தமிழகத்திலும் ஆங்காங்குள்ள தமிழ்க் கழகங்களும் மன்றங்களும், தம் தம் ஊர்த் தொடர்பான அரசு அலுவலகங்களுக்கும், அதிகாரிகளுக்கும், இது போலும் வேண்டுகோள்களை அச்சிட்டு வழங்குவதுடன், அக்கோரிக்கைகள் செயற்படுத்தப் பெறுகின்றனவா என்று கண்காணிக்கும் படியும் புதுச்சேரி தமிழ்க்கழகச் செயலர் திரு. **இலக்கியன்** கேட்டுக் கொள்கிறார்.

4. பள்ளிகளில் பதிவு முதலியவற்றைத் தமிழில் எழுதக் கோரி புதுச்சேரி தனித்தமிழ்க் கழகம் அறிக்கை:

புதுச்சேரி தனித்தமிழ்க்கழகம், பள்ளித் தொடக்கக் காலமாகிய இந்நிலையில், புதுவையில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், அனைத்து நிலைகளிலும் தாய்மொழியும் ஆட்சி மொழியும் ஆகிய **தமிழையே** பயன்படுத்துதல் வேண்டும் என்று வேண்டுகோள் அறிக்கை விடுத்துள்ளது. மாணவர் வருகைப் பதிவேடுகள், அலுவலர் வருகைப் பதிவேடுகள், பொதுப் பதிவேடுகள், பள்ளியின், பெயர் வகுப்புகளின் பெயர்கள், வகுப்பு ஆசிரியர்களின் பெயர்கள் போன்ற அனைத்தையும் **தமிழ்மொழி**யிலேயே எழுதிவைக்குமாறும், அவ்வாறு எழுதும் போது பிறமொழி எழுத்துகள் (சொற்கள்), கலவாத நற்றமிழிலும், பிறமொழிப் பெயர்களைத் தமிழ் இலக்கண மரபுக் கேற்றவாறு அமைத்தும், இடர்ப்பாடுகள் ஏற்படுங்கால் அடைப்பில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தியும் இந்நிலைகளைச் செயற்படுத்துமாறு அங்குள்ள ஆசிரியப் பெருமக்களையும் அதிகாரிகளையும் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

(புதுச்சேரியிலுள்ள இவ்விரு கழகங்களின் நடைமுறைகளையும் செயற்பாடுகளையும் ஆங்காங்குள்ள தென்மொழியன்பர்களும், தனித்தமிழ்க் கழகங்களும் பின்பற்றுவதுடன், அவற்றால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய செய்திகளையும் தென்மொழிக்கு விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.)

5. உலகத் தமிழ்க் கழகத்தின் செயற்குழுக் கூட்டம்:

உலகத் தமிழ்க் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் சென்னை, மறைமலையடிகள் நூலகத்தில், கடந்த 28-5-79ஆம் நாள், மொழி

தவிர்க்க முடியாதது

சி. சு. எழிற்கண்ணன், அறி. இ.,

நாட்டுப்பற் றென்னும் பெயரால் தமிழுக்கு
வேட்டுவைக்கப் பார்க்கின்ற வீணர்காள்!—கேட்கின்றேன்,
இந்தியொடு மட்டுந்தான் இந்திய நாட்டிற்குச்
சொந்தம் அமைந்துள தோ?

இந்திவல் லாண்மைக்கே எங்கும் இடந்தரும்
இந்திய ஆட்சிப் பொறுப்பினரே!—இந்தி
தவிர்க்காதீர் என்றால் தமிழம் பிரிதல்
தவிர்க்க முடியா தது.

இந்திக் குளவுரிமை எந்தமிழுக் கில்லையென்
றெந்து தமிழன் நுவல்கிறன்—சிந்திப்பீர்!
இந்தி எதிர்ப்பினை எள்ளி நகையாடின்
இந்தியா வேண்டாம் இனி.

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்** தலைமையில் நடந்தது. தலைவரவர்கள் உ.த.க வின் குறிக்கோள்களையும் நெறி முறைகளையும் விரிவாக எடுத்துரைத்து, ஆங்காங்குப் புதிய பொறுப்பாளர்களையும் அமைப்பாளர்களையும் தேர்ந்தெடுத்தார்கள். கூட்ட இறுதியில் பழைய கிளைகளைப் புதுப்பிக்கவும், புதுக்கிளைகளை உருவாக்கவும், நல்ல தமிழ் நூல்களையும் இதழ்களையும் மக்களிடையே பரப்பவும், புலவர் பெருமக்களுக்கு விழாக்கள் கொண்டாடவும், பொதுக் கூட்டங்கள் நடத்தவும், தமிழுணர்வைப் பரப்பவும், சாதியொழிப்பை மேற் கொள்ளவுமான பல்வேறு திட்டங்கள் வகுக்கப் பெற்றன.

6. நெடுந்தீவு (தமிழீழம்)—தமிழ் மன்றக் கழகத்தின் 19-ஆவது திருக்குறள் மாநாடு:

வழக்கம்போல், தமிழீழத் தமிழ் மறைக் கழகத்தின், திருக்குறள் மாநாடு, இவ்வாண்டும், நெடுந்தீவு, பெருங்கல்விக்கூட (மகா வித்தியாலய) மாநாட்டரங்கில், கடந்த விடைத்திங்கள் 26, 27 (9, 10—6—79) ஆம் நாட்களில், தமிழ்மறைக் கழகத் தலைவர் திரு. **கா. பொ. இரத்தினம்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இலங்கையிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள தமிழறிஞர்கள், பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். மாநாட்டையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது. கருத்தரங்கம், பாட்டரங்கம், பட்டி மன்றங்கள் நிகழ்த்தப்பெற்றன. இறுதி நாள் இசை நிகழ்ச்சியும், நாடகங்களும் நடைபெற்றன. தமிழகத்தினின்று **பர். ஆறு. அழகப்பன்** (அ.ப.க. கழகம்) அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாளராக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு—பழைய படிகள் மிகக் கூடுதலான சலுகையில் விற்பனை!

அன்பர்கள் உடனடியாக வாங்கிப் பயனடைக!

தென்மொழி அன்பர்களின் நலன் கருதியும், இடத்தட்டுப்பாட்டின் காரணியமாகத் தென்மொழி இருப்பைக் குறைக்க வேண்டியும் கீழ்க்காணும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டுப்** படிகள் மிகக் குறைந்த விலைக்கு விற்கப் பெறுகின்றன. அன்பர்கள் அவற்றை உடனடியாக வாங்கிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழி-பழைய படிகள் சுவடி 10 வரை தனிப்படி 25 காசு.
தமிழ்ச்சிட்டு-பழைய படிகள் குரல் 8 வரை தனிப்படி 10 காசு.

இருப்பிலுள்ள தேவையான மொத்தப் படிகளுக்குக் கணக்கிட்டு, அவற்றின் விலைத் தொகையுடன் அஞ்சல் செலவாகத் **தென்மொழி** 10 படிகளுக்கு 0-60 காசும், **தமிழ்ச்சிட்டு** 10 படிகளுக்கு 0-30 காசும் கூட்டிப் பணவிடை வழியாக **அமைச்சர், தென்மொழி, சென்னை-5.** என்னும் முகவரிக்கு விடுத்து வைக்கவும்.

இருப்பிலுள்ள தென்மொழிப் படிகள் (சலுகை விலையில்):

சுவடி—1, 2, 3-இருப்பில்லை.
சுவடி—4-இல் ஓலைகள் 3, 4, 5 மட்டுமே உள்ளன.
சுவடி—5-இல் ஓலைகள் 2, 3, 7, மட்டுமே உள்ளன.
சுவடி—6-இல் ஓலைகள் 1, 2, 7, 8, 9, 12 மட்டுமே உள்ளன.
சுவடி 7-இல் ஓலைகள் 1, 2, 3, 8, 10-11 மட்டுமே எள்ளன.
சுவடி—8-இல் ஓலைகள் 4, 7, 8-9, 10, 11-12 மட்டுமே உள்ளன.
சுவடி—9-இல் ஓலைகள் 1, 2, 3-4, 5, 8, 9-10, 11, 12உள்ளன.
சுவடி—10-இல் ஓலைகள் 1, 2-4, 5-6, 7-8, 11-12 மட்டுமே உள்ளன.

முழுவிலை இதழ்கள்:

சுவடி—11-இல் ஓலைகள் 1, 2, 3, 6-7, 10-11, 12. உள்ளன.
சுவடி—12-இல் ஓலைகள் 1 முதல் 12 முடிய 12 இதழ்கள் உள்ளன.
சுவடி—13-இல் ஓலைகள் 1, 2, 3, 4, 5-6, 7, 8-12 உள்ளன.
சுவடி—14-இல் ஓலைகள் 1, 2, 3, 4, 5-6, 7, 8-9, 10, 11, 12 உள்ளன.
சுவடி—15-இல் ஓலைகள் 1, 2, 3-4, 5, 6, 7, 8, 9, 10 உள்ளன.

இருப்பிலுள்ள தமிழ்ச்சிட்டுப் படிகள் (சலுகை விலையில்)

குரல்—1-இல், இசை 6, 7, 8, 9, 10, 11.
குரல் 2-இல் இசை 1 முதல் 12 வரை 10 இதழ்கள்.
குரல்—3-இல் இசை 1 முதல் 12 வரை 10 இதழ்கள்.
குரல்—4-இல் இசை 11 தவிர, 1 முதல் 12 வரை 9 இதழ்கள்
குரல்—5-இல் இசை 1 முதல் 12 வரை 9 இதழ்கள்.
குரல்—6-இல் இசை 1 முதல் 12 வரை 8 இதழ்கள்.
குரல்- 7-இல் இசை 1 முதல் 12 வரை 6 இதழ்கள்.
குரல்—8-இல் இசை 1 முதல் 12 வரை 7 இதழ்கள்.

முழுவிலை இதழ்கள்:

குரல் 9-இல் இசை 1 முதல் 12 வரை. 10 இதழ்கள்.
குரல்—10-இல் இசை 10 நீங்கலாக 1 முதல் 12 வரை 10 இதழ்கள்

நாயகம் சார்பிலும், எனது அன்பு கலந்த நன்றியையும் வாழ்த்தையும், தெரிவிப்பதுடன் தங்கள் பணி மேலும் தொடர இறைவனை வேண்டுகின்றேன்.-நன்றி இங்ஙனம், தங்கள் உண்மையுள்ள வாசகர்,

—**எசு. ஐ. செகதீசுவரன்.** வேலணை-5. தமிழ் ஈழம்.

0:658: தனித்தமிழ்க் காவலரே, தலைதாழ் வணக்கம். 'முப்பால் ஒளி' ஏந்தி நிற்கும் திருவள்ளுவர் திருக்கோலத்தைத் 'தென்மொழி' அட்டையிலும் 'வான்புகழ் வள்ளுவர்' விளக்கத்தை உள் பகுதியிலும் வெளியிட்டு எனது முயற்சிக்கு ஊக்கமும் தமிழ்த் தொண்டுக்கு ஆக்கமும் அளித்தமைக்கு அகங்கனி நனி நன்றி. வான்புகழ் வள்ளுவருக்குக் காலங்கடந்து வாழும் சாகாப் பாடல் யாத்துத் தந்த தங்கள் தமிழ்த் திருவடிகளைத் தொட்டும் தொழுதும் வணங்குகின்றேன். பாடலின் பொருள் உணர்ந்து பூரிப்பும் பெருமையும் பெறுகின்றேன். நெஞ்சார்ந்த நனி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தனிப்பட்ட ஆளைத்தாக்குவதை விடுப்பதும் கருத்தைத் திறனாய்வு செய்வதுமே நன்று என்பது எனது தாழ்மையான அன்பு வேண்டுகோள். கழகக் காலப் புலவர் வரிசையில் வைத்துப் போற்றுதலுக்கும் பின்பற்றுதலுக்கும் உரிய தங்கள் அறிவு, ஆற்றல், பண்பு, சால்பு முதலியவற்றிற்கு அது பொருத்தமாகத் தோன்றவில்லை. தங்கள் அன்பு மறவா, —**வ. வேம்பையன்.** கல்பாக்கம்.

0:659: நல்ல தமிழ்ப்பயிர் வளர்க்குஞ் சொல்லேருழவ, புல்லிய வணக்கம். இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்தம் தமிழக வரவையொட்டித் தாங்கள் தீட்டியிருந்த ஆசிரியவுரை நடுநிலைக் கண்ணோட்டத்துடன் இயன்றிருந்தது. நன்று. ஈழத் தமிழர்தம் இன்னல்களை—அன்னாரிடை இடையூறுகளை திரு. அமிர்தலிங்கனார், விளக்குமாற்றால் தமிழகத் தமிழர்தம் உளங்கொள விளக்கியுரைத்து ஆதரவு திரட்ட முயன்றதை, உலகளாவிய இந்து நாளிதழ், வேண்டுமென்றே, அவர்தம்—உணர்வெழுச்சியுரையினை இழித்தும், பழித்துந் திரித்தும் வெளியிட்டுக் குறும்புத் தனமான செயல் புரிந்தது மட்டுமல்லாது, 'இந்து' முன்மொழிந்த குறைகளை அவ்வாறே ஏற்று வழிமொழிந்த திருவாளர் ம. கோ. இரா. தமது பொறுப்பை மறந்து பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதையுந் தாங்கள்-ஆசிரியவுரை வழியாகத் தமிழர்க்கு உறைக்குமாறு விளக்கியிருந்தீர்கள்.

தங்களையொத்த தமிழ்நலம் பேணுநரால் 'தமிழ்' மறுமலர்ச்சியுற்றுத் தடையின்றி வளர்ந்து வருதலைக் காணப்பொறாத தமிழகத்து நடுநிலை(!) நாளிதழ்கள், இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்தம் தமிழக-வரவையும், உரையையும் அக்கறையின்றி 'ஏனோ தானோ' மனப்பான்மையோடு ஒரு சிறு செய்தியாக வெளியிட்டு உயரிய, தூய நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய உயர்தனிச் செம்மொழியை-உடலோம்பலுக்கு வேண்டிய பொருளளவில் பயன்படுத்தி வருதல், பொற்கொழு கொண்டு வரகுக்கு உழும் பேதையர்தம் புல்லிய செயலாகும். தமிழ் நாளிதழ்களின் நிலையே இங்ஙனமிருக்க, உலகளாவிய 'இந்து' நாளிதழின் குறும்புச்செயல் குறித்து இறும்பூது எற்றுக்கு?

ஒருநாடு தனக்குரிய மொழியை இனத்தை, ஓம்பிப் பேணுதலல்லாமல் அந்த நாடு என்றுஞ் சிறந்த நிலையடையாது மொழி நலம் பெறாத-பேணாத நாடு, பிற வளங்களும் பெறா நாடாகும். இங்குள்ள புல்லிய புறம்போக்கு நாளிதழ்களின் நிறம் மாறுங்குணம்